Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, FEBRUARY 03, 2023

வெள்ளிக்கிழமை பெப்ரவரி 03, 2023 | ஒளி: 08 கதிர் 201 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# வெள்ளி முதல் திங்கள் திறக்கலாம்

75 ஆவது சுதந்திர தினம் மற்றும் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இரண்டு தினங்களுக்கு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபான சாலைகளையும் மூடுமாறு மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது. சுதந்திர தினத்தை முன்னிட்டு சனிக்கிழமையும் (04) பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமையும் (05) மதுபான சாலைகள் மூடப்படவுள்ளன.

தொடர்ச்சி P2

# '13 வேண்டாம்'

### மகாநாயக்க தேரர்கள் கடிதம்

### பாதகத்தை எண்ணியே முன்னாள் ஜனாதிபதிகள் தவிர்த்தனர்

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்து, நாட்டுக்குள் குழப்பத்தை தோற்றுவித்துள்ளதாக மூன்று பீடங்களினதும் மகாநாயக்க தேரர்கள், ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர். நாட்டின் சுயாதீனத்தன்மை, ஒருமைப்பாடு, தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாரிய சிக்கல்களுக்கு வழிவகுக்கும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை, எந்த வகையிலும் அமல்படுத்தக்கூடாது என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள், புராதன, வரலாற்று சின்னங்கள், மத அமைப்புகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதன் மூலம் நாட்டின் பிரிவினைவாதத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## அரச செலவு முகாமைத்துவ சுற்றறிக்கை வெளியீடு

2023ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் 06 சதவீதத்தை இரத்துச் செய்தல் மற்றும் அரச செலவுகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பில் நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## மரியாதை வேட்டுகள் இல்லை

பாராளுமன்றக் கூட்டத்தொடரின் புதிய அமர்வு ஆரம்பிக்கும் பெப்ரவரி எட்டாம் திகதியன்று, ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும் வகையில் தீர்க்கப்படும் மரியாதை வேட்டுக்கள் இம்முறை தீர்க்கப்படாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.


## 2 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைப் பேச்சாளர், நேற்று (02) தெரிவித்தார். 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஒத்துழைப்பை வலுவாக்க இந்தியா உறுதிபூண்டுள்ளது



பரஸ்பர நலன்களுக்காக இந்தியா-இலங்கை இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுவாக்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கர், இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிடம் உறுதியளித்துள்ளார். அத்துடன், இந்தியாவின் 74 ஆவது குடியரசு தினத்துக்கான வாழ்த்துகளுக்காகவும் வெளிவிவகார அமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## கரை கடந்தது தாழமுக்கம்

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த தாழமுக்கம் கிழக்கு கரையூடாக வியாழக்கிழமை (02) அதிகாலை நாட்டுக்குள் பிரவேசித்துள்ளதாகவும் நாடு முழுவதும் நகர்ந்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## பெற்றோல் விலை; ஓட்டோ கட்டணம் மாறாது



ஒரு லீற்றர் 92 ரக பெற்றோலின் விலை 30 ரூபாயால் அதிகரிக்கப்பட்டாலும் ஓட்டோ கட்டணம் அதிகரிக்கப்படாது என்று அகில இலங்கை ஓட்டோ சாரதிகள் சங்கம், வியாழக்கிழமை (02) தெரிவித்தது.

புதன்கிழமை (01) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 370 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட 1 லீற்றர் 92 ரக பெற்றோல் விலையை 30 ரூபாயால் அதிகரிக்க இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி ஆகிய நிறுவனங்கள் தீர்மானித்தன.

தொடர்ச்சி P2

Club de Paris
Paris Club

## உத்தரவாதம் வழங்குவதற்கு தயாராகும் பாரிஸ் கிளப்

இலங்கைக்கான கடன் உதவி குறித்த உத்தரவாதங்களை சர்வதேச நாணய நிதியத்துக்கு வழங்க பாரிஸ் கிளப் தயாராக உள்ளது என்று ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர் பிணையெடுப்பைத் திறப்பதற்கு இதுவொரு முக்கிய படி என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

பௌர்ணமி நள்ளிரவு முதல்

## லிட்ரோ சிலிண்டர் விலை கடுமையாக அதிகரிக்கும்




எதிர்வரும் 5ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில், லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 700 முதல் 800 ரூபாய் வரை அதிகரிக்கப்படவுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## மாமாவால் செய்ய முடியாததை மருமகன் செய்ய பார்க்கிறார்

பா.நிரோஸ்

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், புதிய அரசியலமைப்பு ஊடாகவே இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் எனத் தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா, ஜே.ஆர் ஜெயவர்தனாவே முழுமையாக அமல்படுத்த முயலாத 13ஐ அவரது மருமகனான ரணில் விக்கிரமசிங்க முழுமையாக அமல்படுத்த முயல்வதாகவும் தெரிவித்தார்.

ஐ.எம்.எப் கூறிய வழியிலேயே பயணிப்பதாகக் கூறி, வரிகளை கடுமையாக அரசாங்கம் அதிகரித்து வருகிறது. இதனால் நாட்டு மக்கள் பொருளாதார ரீதியாக பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கிறார்கள்.

தொடர்ச்சி P2

## 04 பொருட்களின் விலைகளை குறைத்தது சதொச

04 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை வியாழக்கிழமை (02) முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக லங்கா சதொச அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## புலிகளும் 13ஐ ஏற்கவில்லை

க. அகரன்

கொள்கை என்ற பெயரில் இந்தியாவுக்கு விசுவாசமாக நின்று, இனத்தை விற்பதே தமிழ் கட்சிகளுக்கு இடையேயான போட்டி என்று தெரிவித்த யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், டெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகியன இந்தியாவின் முகவர்கள் என்றும் விமர்சித்தார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி தேர்தலில் போல யானை- மொட்டு சதி உள்ளது

உள்ளூராட்சி மன்றங்களின் வெற்றியுடன் இந்நாட்டின் அரசியல் கலாசாரத்தை ஐக்கிய மக்கள் சக்தி மாற்றியமைக்கும் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2019 ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவை தோற்கடிக்க யானை மொட்டு சதி நடந்தது போல், தற்போது மக்களை படுபாதாளத்தில் போட யானை - மொட்டு சதியொன்று இடம்பெற்று வருவதாகவும், இந்தச் சதியை முறியடிக்கும் பொறுப்பு மக்களுடையது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

தவிசாளர்களுக்கு,பிரதி தவிசாளர்களுக்கு மற்றும் உறுப்பினர்களுக்கு ஒப்பந்தம் செய்தல், மக்கள் வளத்தைப் பயன்படுத்தி பிரதிநிதிகள் வளமடைவது தடைசெய்யப்பட்டு உள்ளதாகவும், ராஜபக்ஷர்கள் உருவாக்கிய மோசடி மற்றும் ஊழல் கலாசாரத்தை ஐக்கிய மக்கள் சக்தி முற்றாக இல்லாதொழிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





## 108 ஏக்கர் காணி இன்று விடுவிப்பு

75 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்தில் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கில் 108 ஏக்கர் காணி இன்றையதினம் (03) விடுவிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

75ஆவது தேசிய சுதந்திர தின

## நினைவு முத்திரை, நாணயம் ஜனாதிபதியிடம் கையளிப்பு



75ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு, இலங்கை தபால் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள நினைவு முத்திரை மற்றும் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள விசேட நினைவு நாணயம் ஆகியவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வியாழக்கிழமை (02) கையளிக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

## 75ஆவது சுதந்திர தினம் கரிநாளாக பிரகடனம்

### மட்டக்களப்பு நோக்கி எழுச்சி பேரணி

### ஹர்த்தாலுக்கும் மாணவர் ஒன்றியம் அழைப்பு

எஸ்.நிதர்ஷன்

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி அன்றையதினம் கடைகள், வர்த்தக நிலையங்களை மூடி, போக்குவரத்து சேவைகளை நிறுத்தி ஹர்த்தால் முன்னெடுக்க யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

மனித உரிமை ஆணைக்குழுவின் மனு விவகாரம்

## பரிசீலிக்கும் வரை மின்வெட்டு இல்லை

### உயர்நீதிமன்றத்தில் உறுதியளித்தது இ.மி.ச

இலங்கை மின்சார சபை உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு மனு மீதான பரிசீலனை நிறைவடையும் வரை, மின்வெட்டு அமல்படுத்தப்படாது என இலங்கை மின்சார சபை உயர்நீதிமன்றத்துக்கு வியாழக்கிழமை (02) உறுதியளித்தது.

தொடர்ச்சி P2

## வசந்த முதலிகே குறித்து மேன்முறையீடு செய்க

### சட்டமா அதிபரிடம் பொலிஸ் தலைமையகம் கோரிக்கை

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகேவை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இருந்து விடுவித்தமை குறித்து, சட்ட நடைமுறைகளுக்கு அமைய மேன்முறையீட்டு மனுவை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் தலைமையகம் சட்டமா அதிபரிடம் வியாழக்கிழமை (02) கோரிக்கை முன்வைத்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## அரச செலவு...

இந்த வருடத்தில் திட்டமிடப்பட்டுள்ள அரசாங்கத்தின் உத்தேச வருமானத்தை திரட்டுதல் தொடர்பில் ஏற்பட்டுள்ள பாரிய நெருக்கடி நிலையில் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை குறைத்துக்கொள்ளும் நோக்கில், மீண்டெழும் செலவை 06 சதவீதத்தால் இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, அனைத்து அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், மருத்துவ செலவுகள், வாடகை வரி, உள்ளூராட்சி மன்றங்களுக்கான வரி, ஓய்வூதிய சலுகைகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களுக்கான வட்டியை செலுத்துதல், திறைசேரி பற்றுச்சீட்டு, திறைசேரி முறிகள் மீதான சலுகைகள், அத்தியாவசிய நலன்புரி கொடுப்பனவுகளை செலுத்துதல் மற்றும் அரசியலமைப்பு மற்றும் ஒப்பந்த இணக்கப்பாடுகள் தொடர்பில் வரவு செலவுத்திட்டத்தினூடாக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை தவிர்த்து, ஏனைய அனைத்து மீண்டெழும் செலவுகளுக்கான மொத்த நிதியில் 06 சதவீதத்தை இரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கான நிவாரணங்களை வழங்குதல், சமுர்த்தி, முதியோர், சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு, ஊனமுற்றோருக்கான கொடுப்பனவு, கர்ப்பிணி தாய்மார்களுக்கான போஷாக்கு உணவுத் திட்டம், முன்பள்ளிகளுக்கான காலை நேர உணவு, போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களுக்கான போஷாக்குணவு திட்டம் ஆகியவற்றிற்கு புதிய சுற்றறிக்கையூடாக எவ்வித இடையூறுகளும் ஏற்படாது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உத்தரவாதம் வழங்குவதற்கு...

நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு கடன் மறுசீரமைப்புக்கான தனது ஆதரவை விரைவில் பாரிஸ் கிளப் அறிவிக்க உள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாதவர் தெரிவித்துள்ளதாக ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

கடந்த செப்டம்பரில் சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட முக்கிய இருதரப்பு கடன் வழங்குபவர்களிடமிருந்து நிதி உத்தரவாதம் தேவைப்படுகிறது.

நவம்பர் மாதம் முதலீட்டாளர்களுக்கு வெளியிடப்பட்ட தரவுகளுக்கு அமைய இலங்கையின் பொதுக் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 122 சதவீதமாக காணப்படுவதுடன், அதில் 70 சதவீதம் வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாரிஸ் கிளப் அல்லாத உறுப்பினர்களான சீனாவும் இந்தியாவும் இருதரப்பு கடன் வழங்குவதில் முன்னணியில் உள்ளதுடன், பாரிஸ் கிளப்பின் உத்தரவாதம் சீனாவை நம்பியிருக்கவில்லை என்று வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாணய நிதிய திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கையின் கடன் சுமையை குறைக்க உதவுவதற்கு இந்தியா முன்னர் உறுதியளித்த நிலையில், சீனாவின் எக்சிம் வங்கியும் இரண்டு வருட கால அவகாசத்தை வழங்குவதாக அண்மையில் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## மாமாவால் செய்ய...

13ஆவது திருத்தச் சட்டம் ரணில் விக்கிரமசிங்கவின் மாமனாரான ஜே.ஆர். ஜயவர்தனவின் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம். இச்சட்டம் கொண்டுவரும்போது ஆட்சியிலிருந்த ஜே.ஆருக்கு மக்கள் ஆணை கிடையாது. ஜே.ஆர் கூட இதனை முழுமையாக அமல்ப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், ரணில் தனது சொந்த அரசியல் நோக்கங்களுக்காக அதனை முழுமையாக அமல்ப்படுத்தப் பார்க்கிறார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வுக் காணப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 69 இலட்ச மக்கள் வாக்களித்தது 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்ப்படுத்துவதற்கு அல்ல; மாறாக புதிய அரசியலமைப்பு ஊடாக இனப் பிரச்சினை உள்ளிட்டவற்றுக்கு தீர்வை வழங்க வேண்டும் என்பதற்கே வாக்களித்தனர்.

நாட்டு மக்கள் மறந்துபோயுள்ள இனவாதத்தை இதனூடாக ரணில் தூண்டப் பார்க்கிறார். அரச நிர்வாகச் செயற்பாடுகளில் தலையீடுகளை மேற்கொள்வது, தேவையற்ற அழுத்தங்களைப் பிரயோகிப்பது என ஜே.ஆர்.ஜயவர்தனவிடம் காணப்பட்ட மோசமான செயற்பாடுகள் ரணிலிடமும் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

# ‘13 வேண்டாம்’

நாட்டில் ஏற்படக்கூடிய சிக்கல், பாதகமான நிலையை கருத்திற்கொண்டே முன்னர் ஜனாதிபதி பதவியை வகித்தவர்கள் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை தவிர்த்துக்கொண்டதாக மகாநாயக்க தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மக்களின் இறைமையை பாதுகாக்கும் பொறுப்புள்ள நிறைவேற்றதிகார ஜனாதிபதி, மத்திய அரசாங்கத்தின் இறைமையை சீர்குலைக்கும் இத்தகைய அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றமை, மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்படுவதற்கான காரணமாக அமையும் எனவும் மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர். நாட்டில் நிலவுகின்ற பொருளாதர நெருக்கடியால் பிராந்திய, உலக வல்லரசுகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான சில நிபந்தனைகளுக்கு இணக்கம் தெரிவிக்குமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டாலும், நாட்டின் ஒருமைப்பாடு, சுயாதீனத் தன்மையை விபத்தில் ஆழ்த்தும் இத்தகைய பிரேரணைகளை நிராகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மகாநாயக்க தேரர்கள், ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## லிட்ரோ சிலிண்டர் விலை கடுமையாக...

5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 200 முதல் 300 ரூபாயாலும் 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை கிட்டத்தட்ட 100 ரூபாயாலும் அதிகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரிப்பு காரணமாக எரிவாயு சிலிண்டரின் விலை மீண்டும் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு நவம்பர், டிசெம்பர் மாதங்களில் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டிருந்ததுடன், ஜனவரி மாதம் சிலிண்டர் விலை குறைக்கப்பட்டிருந்ததது.

4,610 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட 12.5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 201 ரூபாயால் குறைக்கப்பட்ட நிலையில், முறையே 1,850 ரூபாயாகவும், 860 ரூபாயாகயும் விற்பனை செய்யப்பட்ட 5 மற்றும் 2.3 கிலோ சிலிண்டர்களின் விலைகளும் முறையே 80 மற்றும் 38 ரூபாய்களால் குறைக்கப்பட்டிருந்தன.

தற்போது, 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 4,409 ரூபாயாகவும் 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,770 ரூபாயாகவும் 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 822 ரூபாயாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கு சிலிண்டர்கள் விற்பனை செய்யப்படுவதுடன், போக்குவரத்து செலவினத்தைக் கருத்திற்கொண்டு ஏனைய மாவட்டங்களில் சிலிண்டர் விலைகளில் மாறுபாடுகள் காணப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கரை கடந்தது...

இன்றைதினம் (03) அதிகாலை வலுவிழந்து நாட்டின் மேற்கு கரையூடாக வெளியேறும் என்றும் நாட்டில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. இதன் காரணமாக வடக்கு, வட மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மற்றும் புத்தளம் மாவட்டத்தின் சில பகுதிகளிலில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. மேல், சப்ரகமுவ மாகாணங்களின் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனிடையே, எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு தென்மேல் வங்காள விரிகுடாவை சூழவுள்ள கடற்பிராந்தியங்களில் கடற்றொழிலில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. வடக்கு, வடமத்திய மற்றும் மேல் மாகாணங்களிலும் திருகோணமலை, மட்டக்களப்பு, காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 முதல் 60 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

## வெள்ளி மூடினால்...

இன்றையதினம் (03) மதுபான சாலைகள் மூடப்பட்டும் நேரத்தில் அவற்றை மூடி, எதிர்வரும் திங்கட்கிழமை (06) வழமையாக திறக்கும் நேரத்தில் அவற்றைத் திறக்குமாறு மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

## 108 ஏக்கர்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

காணிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழிக்கு அமைய 108 ஏக்கர் காணி 197 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நினைவு முத்திரை...

நினைவு முத்திரையை வெகுசன ஊடக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவும் நினைவு நாணயத்தை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவும் கண்டி ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

50 ரூபாய் பெறுமதியான நினைவு முத்திரை மற்றும் அதன் முதல் நாள் கடித உறை என்பன நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தபால் நிலையங்களிலும் உப தபால் நிலையங்களிலும் விற்பனை செய்யப்படும்.

அத்துடன் கண்டி, திருகோணமலை, குருநாகல், காலி மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள விசேட முத்திரை கருமபீடங்கள் ஊடாக இந்த நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் கடித உறையை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளை இலங்கை முத்திரைப் பணியகம் மேற்கொண்டுள்ளது.

75 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை தபால் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முத்திரை கண்காட்சி மற்றும் அருங்காட்சியக கண்காட்சி என்பன பெப்ரவரி 6 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை கொழும்பு 10 டி.ஆர். விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள தபால் தலைமையக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள 1000 ரூபாய் பெறுமதியுள்ள நினைவு நாணயம் புழக்கத்துக்கு விடப்பட மாட்டாது என்பதோடு, இது இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட 71 ஆவது நினைவு நாணயம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 04 பொருள்...

அனைத்து சதொச விற்பனை நிலையங்களிலும் இந்த விலை குறைப்பு நேற்று முதல் அமலுக்கு வருகிறது என்றும் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 5 ரூபாயால் குறைக்கப்பட்டு 230 ரூபாயாகவும், ஒரு கிலோ கிராம் உள்ளூர் சிவப்பு அரிசி 10 ரூபாவால் குறைக்கப்பட்டு 169 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படவுள்ளன.

மேலும், ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயம் 15 ரூபாய் குறைக்கப்பட்டு 165 ரூபாயாகவும் ஒரு கிலோ கிராம் செத்தல் மிளகாய் 25 ரூபாய் குறைக்கப்பட்டு 1,675 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளும் 13ஐ...

அனைவராலும் இன்று பேசப்படும் 13 ஆம் திருத்தம் ஒற்றையாட்சிக்குள் இருக்கின்ற ஒரு கட்டமைப்பு. ஒற்றையாட்சி என்பது சிங்கள பௌத்த ஆட்சி. வேறு எவருக்கும் அங்கு அதிகாரம் இல்லை. அதனாலேயே தமிழ் பெருந்தலைவர்கள் நீண்டகாலமாக இதனை நிராகரித்து வந்திருக்கின்றார்கள். விடுதலைபுலிகள் கூட அதனை ஏற்றுகொள்ளவில்லை என்றார்.

வவுனியாவுக்கு நேற்று (02) விஜயம்செய்த அவர் தேர்தல் பரப்புரை கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவிக்கும்போது கூறியதாவது;

இது ஓர் உள்ளூராட்சி தேர்தலாக இருந்தாலும் இந்தச் சூழலை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். போர் முடிவடைந்து 14 வருடங்கள் கடக்கின்ற நிலையிலும் பொருளாதார ரீதியாகவோ அரசியல் ரீதியாகவோ எந்தவிதமான முன்னேற்றமும் தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை.

போர் குற்றத்துக்கும் தீர்வு கிடைக்கவில்லை. எமது விடயங்கள் சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாக இருந்தாலும் பாதிக்கப்பட்ட தரப்பான நாங்கள், முன்னேற்றமடையாமலே இருக்கிறோம்.

பயங்கரவாத தடைச்சட்டம் ஒரு கொடூரமான சட்டமாக சொன்னாலும், அந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படும் சிங்கள மக்கள் விடுவிக்கப்படுகின்றார்கள். ஆனால், அந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ்மக்கள் தொடர்ச்சியாக சிறைகளிலேயே வாடுகின்றனர் என்றார்.

## பெற்றோல் விலை...

பெற்றோல் விலை 400 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், கட்டணத்தை அதிகரிப்பதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, கொழும்பில் வியாழக்கிழமை (02) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஓட்டோ சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்தார்.

பெற்றோல் விலை அதிகரிக்கும் போதோ அல்லது குறைக்கப்படும்போதோ அது ஓட்டோ போக்குவரத்து சேவையை பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று தெரிவித்த அவர், பயணிகளும் ஓட்டோ சாரதிகளும் கட்டணம் குறித்து குழப்பமடைகின்றனர் என்றார்.

ஓட்டோக்கள் மற்றும் கட்டணங்கள் தொடர்பில் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லை என்றும் பயணிகளிடம் நியாயமற்ற முறையில் கட்டணம் அறவிடப்பட்டால், அவர்கள் ஓட்டோவில் பயணிக்க மறுக்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி தேர்தலில்...

கிண்ணியாவில் நேற்று முன்தினம் (01) இடம்பெற்ற தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று இனவாதம்,இன பேதம்,மதவாதம் மத பேதம் என்பன தோற்றுப்போயுள்ளன. இனவாதத்தையும், மதவாத்தையும் விதைத்து நாட்டை அழித்த ராஜபக்ஷர்களின் மொட்டின் கதையும் முடிந்துவிட்டது. தற்போது யானையும் மொட்டும் ஒன்று சேர்ந்து மக்களின் மீது வரியை சுமத்தி மக்களுக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## வசந்த முதலிகே...

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் வசந்த முதலிகேவுக்கு பொருந்தாது என்றும் சட்டத்தின் விதிகளை தவறாகப் பயன்படுத்துவதற்கான ஆதாரங்களை முறைப்பாட்டாளர் தரப்பு உருவாக்கியுள்ளது என்றும் அறிவித்த கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், வசந்த முதலிகேவை அந்த வழக்கில் இருந்து விடுதலை செய்தார்.

## பரிசீலிக்கும் வரை...

உயர் நீதிமன்ற நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, யசந்த கோத்தாகொட, ஷிரான் குணரட்ன ஆகியோர் முன்னிலையில் இந்த மனு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இலங்கை மின்சார சபையின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி உதித இஹலஹேவா இந்த உறுதிமொழியை வழங்கினார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர், இலங்கை மின்சார சபையின் தலைவர், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆகியோருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை திங்கட்கிழமை (30) தாக்கல் செய்தது.

## 75ஆவது சுதந்திர...

யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் வியாழக்கிழமை (02) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டது.

நாளை 4ஆம் திகதியை கரிநாளாக பிரகடனப்படுத்தி தமிழர்களுக்கான தீர்வுகளை வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி பேரணி இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

இது குறித்து வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது;

யாழ். பல்கலைக்கழக மாணவ ஒன்றியம், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுடன் ஒன்றிணைந்து பெப்ரவரி 4ஆம் திகதியை கரிநாளாக பிரகடனப்படுத்தியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் தமிழ் மக்கள் மீதான தொடர்ச்சியான ஆக்கிரமிப்புகள், அடக்குமுறைகளை எதிர்த்தும், ஆக்கிரமிப்பு சிங்கள இராணுவம் எமது மண்ணிலிருந்து வெளியேறவேண்டும் என்பதை வலியுறுத்தியும் வடக்கிலிருந்து கிழக்கு வரையான பேரணியைத் திட்டமிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தை எனும் போலி நாடகத்தைத் தோலுரித்து சர்வதேச சமூகத்திற்கு காட்டவேண்டிய அவசியத்தாலும், கூட்டாக தமிழ் மக்கள் தமது நிலைப்பாடுகளை வலுவாக முன்வைக்க வேண்டியதன் அவசியத்தின் அடிப்படையிலும் குறித்த பேரணி திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில், தமிழ் மக்கள் மிகப் பேரெழுச்சியுடன் கூட்டாக தமிழ் மக்களின் அபிலாசைகளான ‘பொங்கு தமிழ்’ எழுச்சியினூடாக வலியுறுத்தப்பட்ட சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பவற்றை முன்னிறுத்தி முன்னெடுக்கும் இப்பேரணியை மேலும் வலுப்படுத்துமாறு கோரியுள்ளனர்.

வடக்கு - கிழக்குத் தழுவிய எமது வர்த்தக சமூகத்தினரையும், கடற்றொழிலாளர்கள், தனியார் மற்றும் அரச பஸ் உட்பட அனைத்து தொழிற்சங்கங்களையும் பெப்ரவரி 4 கரிநாளாக தொழில் புறக்கணிப்பையும் முழுமையான கடையடைப்பையும் மேற்கொண்டு ஹர்த்தாலை முழுமையாக அனுஷ்டிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சுதந்திர தினம் தமிழர் தேசத்தின் கரிநாள் என்பதை சர்வதேச நாடுகளுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்றும் உரிமையுடன் கேட்டு நிற்கின்றோம்.

அத்துடன் இத்தினத்தில் உங்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள், கல்வி நிலையங்கள், தொழில் இடங்களில் கறுப்பு கொடிகளை பறக்கவிட்டு காலாகாலமாக நாம் சிங்கள பௌத்த பேரினவாத அடக்குமுறைக்கும், ஆக்கிரமிப்புக்கும் எதிராக தமிழர் தேசமாக முன்னெடுக்கும் போராட்டத்தில் இணைத்து கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

முன்னெடுக்கப்படும் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய இப்பேரணியானது பெப்ரவரி 4ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகி பெப்ரவரி 7ஆம் திகதி மட்டுநகரை வந்தடையும் அதேநேரம் அம்பாறை மாவட்டத்திலிருந்தும் பேரெழுச்சியாக மக்கள் வந்து இணைந்து மாபெரும் பொது கூட்டத்துடன் பேரெழுச்சியாக நிறைவு பெறும்.

இப்பேரணிகளில் மாணவர்கள், மதத்தலைவர்கள், பொதுமக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் தரப்பினர் அனைவரும் அலை அலையாக இணைந்து தமிழ் தேசத்தின் நிலைப்பாட்டினை முழு உலகத்துக்கும் வெளிப்படுத்த அணிதிரளுமாறு அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



75ஆவது சுதந்திர தினம்:

# தனித்துவம் மிக்க தேசிய கொடி



நடராஜன் மிருணாளினி

சுதந்திர தினமான இன்று எமது தேசிய கொடிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பிரித்தானிய கொலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த எமது தேசத்துக்கு, 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி சுதந்திரம் கிடைத்தது.

அடிமைத்தனத்தில் இருந்து, எமது தேச மக்களுக்கு விடுதலை கிடைத்த அன்றைய தினம், தேசிய விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. எமது மக்கள் அனைவரும் தேசிய கொடியை, தமது வீடுகளிலும் வேலைத் தலங்களிலும் பொது இடங்களிலும் பறக்கவிட்டு மரியாதை செய்கின்றனர்.

இன்று சுதந்திர தினத்தில் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் கம்பீரமாக தேசிய கொடி பறப்பதனை அவதானிக்க முடிகின்றது. ஒரு நாட்டின் பெருமையை பறைசாற்றும் சின்னமாக தேசிய கொடி மதித்து கௌரவிக்கப்படுகிறது.

தேசிய கொடியை ஏற்றும் போதும் அதைக் கம்பத்திலிருந்து இறக்கும் போதும், ஒரு நாட்டில் தலைவருக்கு கொடுக்கப்படும் அதே அளவு மரியாதை, தேசிய கொடிக்கும் கொடுக்கப்படுகிறது. நாட்டின் முக்கிய உத்தியோகபூர்வ நிகழ்வுகளின் போது, தேசிய கொடி சகல அரசாங்க கட்டடங்களிலும் கம்பீரமாக பறக்கவிடப்படுகிறது.

பலவகையான கொடிகளை ஓரிடத்தில் பறக்கவிடும் போது, அவற்றை விட சற்று உயரத்தில் தேசிய கொடி பறக்கவிடப்பட வேண்டும். 1972ஆம் ஆண்டில் இலங்கை ஒரு ஜனநாயக குடியரசாக மாற்றமடைந்த போதும் 1978ஆம் ஆண்டில் இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறை அறிமுகம் செய்யப்பட்ட போதும், எமது நாட்டின் தேசிய கொடியில் எவ்வித குறிப்பிடத்தக்க மாற்றமும் செய்யப்படவில்லை.

ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து இலங்கை விடுதலை அடையும் வேளையில், இலங்கை நாட்டுக்கு கொடிக்கான தேவை ஏற்பட்டது. அதுவரை பிரித்தானிய ஒன்றியக் கொடியே, இலங்கையின் கொடியாக இருந்தது.

விடுதலையின் போது, இலங்கையின் பிரதமராக இருந்த டி. எஸ். சேனாநாயக்க இலங்கையின் கடைசி இராச்சியமான கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் சிவப்பு நிறப் பின்னணியில் மஞ்சள்நிற போர் வாளேந்திய சிங்கக் கொடியானது, சுதந்திர இலங்கையைக் குறிக்கும் சிறந்த கொடியாக அமையும் எனத் தெரிவு செய்தார்.

எனினும், அக்கொடியில் தங்கள் இனங்களைப் பிரதிபலிக்கும் அடையாளங்கள் ஏற்படுத்த வேண்டும் என தமிழ், முஸ்லிம் தலைவர்கள் கேட்டுக்கொண்டனர்.

சில நாள்களின் பின்னர், தேசிய கொடியில் மாற்றம் ஏற்படுத்துவது தொடர்பாக எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்க, ஜீ. ஜீ பொன்னம்பலம், ஜே.எல். கொத்தலாவல, டி.பி ஜாயா, எல்.ஏ ராஜபக்ச, எஸ். நடேசன், ஜே. ஆர் ஜயவர்தன என்போர் அடங்கிய பாராளுமன்றக்குழு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைக்கமைய தேசிய கொடியில் சமஅளவு அகலம் கொண்ட மஞ்சள், பச்சை நிறமான இரண்டு நிலைகுத்தான பட்டைகள் உருவாக்கப்பட்டன.

இலங்கையின் தேசிய கொடி, மஞ்சள் நிறப் பின்னணியில் அமைந்துள்ளது. இதில் இரண்டு பகுதிகளைக் காணமுடியும். கொடிக் கம்பத்தின் பக்கம் இருக்கும் பகுதியில் செம்மஞ்சளும், பச்சையுமான நிலைக்குத்தான இரண்டு பட்டைகள் உள்ளன. கொடியின் பெரும்பகுதியை அடக்கியுள்ள மற்றப்பகுதி கருஞ்சிவப்பு நிறத்தில் மஞ்சள் நிறத்திலான வாளேந்திய சிங்கமொன்றையும், நான்கு மூலைகளிலும் அரச மரத்து இலைகளையும் கொண்டுள்ளது.

செம்மஞ்சள் நிறப் பட்டை தமிழரையும் பச்சை நிறப் பட்டை முஸ்லிம்களையும், சிங்கத்துடன் கூடிய கருஞ் சிவப்பு நிறப் பகுதி சிங்களவர்களையும் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. அத்துடன் பௌத்த மதத்தைக் குறிக்கும் வகையில் நான்கு அரசிலைகள் கொடியின் நான்கு மூலைகளிலும் இணைக்கப்பட்டன. இக்கொடியே தற்போது இலங்கையில் பயன்பாட்டில் உள்ளது.

பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்ற அன்று, இலங்கையின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கவின் கொடி ஏற்றப்பட்டு, பிரிட்டிஷ் கொடி இறக்கப்பட்டமை எமது நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக அமைந்துள்ளது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தேசிய கொடியானது, ஒரு தேசிய தலைவரின் மரணம் அல்லது இயற்கை அனர்த்தத்தால் நாட்டில் ஏற்படும் மனித அழிவின் போது, தேசத்தின் சோகத்தை காண்பிக்கும் முகமாக, தேசிய கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும்.

முக்கிய நிகழ்வுகளின் போது, தேசிய கொடியை பயன்படுத்திய பின்னர், அவற்றை மிகவும் பாதுகாப்பாக இறக்கி, நெறியாக மடித்து வைக்க வேண்டும். தேசிய கொடியை தலைகீழாக, கவனக்குறைவின் நிமித்தம் கட்டுவது மன்னிக்க முடியாத குற்றம் மட்டுமல்ல; இலங்கை சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுகிறது.

தேசிய கொடியை பறக்கவிடும் போது, அதன் ஒரு பகுதி தரையில் படுவதையோ வேறு ஏதாவது ஒரு பொருளின் மீது விழுவதையோ தடுக்க வேண்டும். இவ்விதம் தேசிய கொடியை கட்டுவதும் ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும்.

அதுபோல், தேசிய கொடிகளை அச்சிடும் போது அச்சகங்கள் அதன் இயற்கையான வர்ணங்களை மாற்றிவிடாமலும் அவதானமாக இருக்க வேண்டும். தேசிய கொடியை பாதைகளின் வீதியின் குறுக்கே கட்டுவதும் அதனை அவமதிக்கும் செயலாக கருதப்படும்.

சிலர் தேசிய கொடியை பொலிதீனில் அச்சிட்டு தேசிய வைபவங்களின் போது தெருத்தெருவாக கட்டிவிடுவதுண்டு. அந்த வைபவம் முடிவடைந்த பின்னர் ஒருவருமே அவற்றை அகற்றி விடவேண்டும் என்பதில் அக்கறை காட்டுவதில்லை. இறுதியில் கொடிகள் வீதியில் அநாதரவாக விழுந்துவிடும் போது, அவற்றை பலரும் பொருட்படுத்தாமல் மிதித்து செல்கின்ற வேதனைக்குரிய சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

ஆகவே, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு, தேசிய கொடியை அவமதிக்கக்கூடிய வகையில் அவற்றை பயன்படுத்துவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொலிஸாருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சர்வதேச ஒரு நாள் கிரிக்கட் போட்டிகளின் போது இலங்கையின் தேசிய கொடி மாத்திரமின்றி இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் தேசிய கொடிகள் தரக்குறைவான முறையில் பயன்படுத்துவதுண்டு. சில பெண்கள் தேசிய கொடியை பயன்படுத்தி ஆடைகளை தைத்து விடுவதுண்டு. வேறு சிலர் ஒரு நாள் கிரிக்கட் போட்டியில் ஆரவாரம் செய்யும் போது தேசிய கொடியை மடியில் கட்டிக்கொண்டு ஆடுவதும், அப்பொழுது அந்தக் கொடி நழுவி கீழே விழும் சம்பவங்கள் நடைபெறுவதும் இப்போது அதிகரித்த வண்ணம் இருக்கின்றன.

இனிமேல், நாட்டின் சுதந்திரத்தின் சின்னமாக விளங்கும் தேசிய கொடியை கௌரவிக்கக்கூடிய நற்பண்புகளை, இப்போது பாடசாலைகளில் அறிவுறுத்துவதற்கான திட்டங்களை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

தேசிய கீதம் இசைக்கப்படும் போது, நாம்அனைவரும் எங்களை அறியாமலேயே எழுந்து நின்று சிரம் தாழ்த்தி, அதற்கு மாரியாதை செலுத்துவதைப் போன்று, தேசிய கொடி கட்டடங்களில் ஆடம்பரமாக பறந்து கொண்டிருக்கும் போது, அதனை அண்ணார்ந்து பார்த்து சிரம் தாழ்த்தி கௌரவித்தல் அவசியமாகும்.

# காஞ்சனவை கைது செய்க



மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என தெரிவிக்கும் மின்சார நுகர்வோர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க, காஞ்சனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு தேவையான எரிபொருளை விநியோகிக்க முடியாத அரசாங்கத்துக்கு எம்மை கைது செய்வதற்காக கொள்ளுபிட்டியில் இருந்து திவுலுபிட்டியவுக்கு எரிபொருளை செலவிட்டு வருவதற்கு எரிபொருள் இருக்கிறது. அடக் கடவுளே! ஒரு தொலைபேசி அழைப்பு தந்தால் நாமே பொலிஸ் நிலையத்துக்கு வருவதற்குத் தயாராக இருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கு தொடர்ந்து மின்சாரத்தை வழங்குவதற்கு தேவையான எரிபொருளை வழங்காத இந்த அமைச்சரவைக்கும் மின்சாரத்துறை அமைச்சருக்கும் நாட்டு மக்கள் தொடர்பில் அக்கறை இல்லை.

அரச அடக்குமுறையால் நாட்டு மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் மின்சக்தி, வலுசக்தி அமைச்சர், அமைச்சின் செயலாளர் உள்ளிட்டோரை உடனடியாகக் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோல காஞ்சன விஜேசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர வேண்டும் என்றார்.

## ஆசி பெற்றார் ஜனாதிபதி

கண்டிக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மல்வத்து, அஸ்கிரி மகாநாயக்க தேரர்களை நேற்று (02) சந்தித்து ஆசி பெற்றார்.







## ஹெரோய்னுடன் சுகாதார ஊழியர் கைது

டி.கே.ஜி.கபில

ஹெரோய்ன் போதைப்பொருளுடன், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சுகாதார உதவியாளராக கடமையாற்றும் பெண்ணை, கட்டுநாயக்க பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

38 வயதான இப்பெண், பொலன்னறுவையைச் சேர்ந்தவர் எனவும், தற்போது கட்டுநாயக்க பிரதேசத்தில் வசித்து வருவதும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தனித்தனியாக சுற்றப்பட்டு, சிறிய பொட்டலங்களில் அழகுசாதனப் பொருட்களுடன் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான 05 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளே பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. காரில் வந்த நபருக்கு ஹெரோய்னை வழங்க முயன்ற போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## தேர்தல் பிரசாரங்களை குறைத்து கொண்டது ஏன்?

### மொட்டு கட்சி விளக்கம்



தேர்தல் செலவீனங்களைக் கருத்திற்கொண்டே தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன குறைத்துள்ளதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடவில்லை என எதிர்க்கட்சிகள் கூறிவருகின்றன. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்கிற ரீதியில் நாம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரசார முறைகளை பின்பற்றி, தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம்.

தேர்தல் தொடர்பான சட்டங்களை நாம் நன்கு அறிந்து வைத்துள்ளோம். குறிப்பாக, தேர்தல் செலவீன ஒழுங்குப்படுத்துதல் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனாலே நாம் பிரசாரங்களைக் குறைத்துள்ளோம்.

அமைதியான, ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்தல் பிரசாரங்களையே நாம் முன்னெடுக்க உள்ளோம். தேர்தல் காலத்தில் வழங்கப்படும் வாக்குறுதிகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படுவது மிகக் குறைவாகவே இருக்கும். இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகளிலேயே இந்த வழமையே காணப்படுகிறது.

## தியாகம் செய்தவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம்

### வாழ்த்துச் செய்தியில் பிரதமர்



அண்மைக்காலமாக எமது நாடு பல்வேறு சவால்களை எதிர்கொண்டு பொருளாதார பின்னடைவுக்கு முகம்கொடுத்துள்ளதாக பிரதமர் தினேஸ் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

75ஆவது சுதந்திரத் தினத்தை முன்னிட்டு பிரதமர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; 1815ஆம் ஆண்டு மார்ச் 2ஆம் திகதி, சரணடையும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர், பிரித்தானிய கொடி ஏற்றப்பட்ட போது, வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரர் பிரித்தானியக் கொடியை அகற்றிய வேளையிலேயே அந்நிய ஆதிக்கத்தின் மீதான இலங்கையின் வெறுப்பும், எதிர்ப்புணர்வும் ஆரம்பமானது.

இன்று நாம் எமது சுதந்திரத்தைக் கொண்டாடுவது மட்டுமல்லாமல், அதற்காகப் போராடியவர்களுக்கும், எமது நாட்டிற்காக ஒரு தொலைநோக்குப் பார்வையை கொண்டிருந்தவர்களுக்கும், அதற்காகத் தம்மையே தியாகம் செய்தவர்களுக்கும் நன்றி செலுத்துகிறோம்.

தாய்நாட்டின் சுதந்திரப் போராட்டத்தின் போது எம் முன்னோர்கள் வெளிப்படுத்திய துணிவு, வீரம் மற்றும் அவர்கள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்கள் நம் நினைவுகளில் இருந்து மறந்துவிடுவதற்கு இடமளிக்கக் கூடாது.

கடந்த 75 ஆண்டுகளில் தீவிரவாதிகள் மற்றும் பிரிவினைவாதிகளிடம் இருந்து கடினமாக வென்றெடுக்கப்பட்ட சுதந்திரத்தை நிலைநிறுத்தவும் பாதுகாக்கவும் இதேபோன்ற தியாகங்களைச் செய்த ஆயுதப் படைகளைச் சேர்ந்த துணிச்சலான உறுப்பினர்களுக்கும் நாம் எமது மரியாதையை செலுத்த வேண்டும் என்றார்.

## சுதந்திரத்தின் பவள விழாவைக் கொண்டாடுவோம்

### சபாநாயகர் வாழ்த்து



ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து சுதந்திரம் கிடைத்து, சுதந்திரத்தின் பவள விழாவுக்காக முதன்முதலில் இலங்கையிலும் உலகெங்கிலுமுள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் எனது அன்பான வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தனது சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இன வன்செயல்களால் பாதிக்கப்படும்

# தமிழ் கிராமங்களில் மேம்பாட்டுத் திட்டங்கள்

■ க. விஜயரெத்தினம்

அம்பாறை மாவட்டத்தில் இனவன்செயல்கள் காரணமாக பாதிப்புகளை தொடர்ந்தும் எதிர்கொண்டு வருகின்ற தமிழ் கிராமங்களில், வாழ்வாதார மேம்பாட்டு திட்டங்களை, இவ்வருடத்தில் முன்னுரிமைப்படுத்தி மேற்கொள்வதற்கு, அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்க சமாசம் தீர்மானம் எடுத்துள்ளது.

சமாசத்தின் தலைவர் எஸ். லோகநாதன், இது தொடர்பாக புதன்கிழமை (01) ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்ததாவது; இம்மாவட்டத்தில் இன வன்செயல்கள் காரணமாக தொடர்ந்தும் பல கிராமங்கள், பல வடிவங்களில் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றன. இவற்றை அடையாளம் கண்டு, எமது வேலை திட்டங்களில் முன்னிலைப்படுத்த தீர்மானித்து உள்ளோம்.

இங்கு வாழ்வாதார மேம்பாட்டு திட்டங்களை முன்னெடுப்பதற்கு, புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் உதவி, ஒத்தாசை வழங்க முன்வந்துள்ளார்கள் எனக்குறிப்பிட்டார்.

## காரைதீவு கலைஞர்களுடன் பிரதேச செயலாளர் சந்திப்பு



■ வி.ரி சகாதேவராஜா

காரைதீவு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கலைஞர்களுடன் காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், எதிர்காலத்தில் மேற்கொள்ளக்கூடிய திட்டங்களை முன்வைத்து சந்திப்பொன்றை புதன்கிழமை (01) மேற்கொண்டார்.

கலாசார உத்தியோகத்தர்களான கே.சதாகரன், எஸ். சிவசோதி சந்திப்பின் நோக்கம் பற்றி விவரித்தார்கள். எதிர்காலத்தில் ஈசஞ்சிகை, காரணீகம் வெளியிடல் , ஆவணப் புத்தகம், கலை மன்றங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் கலைஞர்களின் விவரம் திரட்டப்பட்டு வகைப்படுத்தப்பட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கடற்கரையில் சிரமதானம்

■ எம்.எஸ்.எம் ஹனீபா



இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை அண்டியுள்ள கடற்கரை பிரதேசத்தை சுத்தப்படுத்தும் சிரமதான பணியும் மரம் நடுகையும் புதன்கிழமை (01) நடைபெற்றன.

அம்பாறை மாவட்ட செயலகம், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ஆகியன இணைந்து, பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபுபக்கர் தலைமையில் நடைபெற்ற சிரமதான நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக செயலாளர் வீ. ஜெகதீசன், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. எம் சாபீர், சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் ஏ.எம் இஸ்மாயில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடற்படையினர், இராணுவத்தினர், பொலிஸார், கடலோரம் பேணும் திணைக்களத்தின் அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள், அட்டாளைச்சேனை பிரதேச சபையினர் ஆகியோர் இணைந்து கடற்கரையை சுத்தம் செய்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## ஏற்றுமதிக்கான சாத்திய வளம்



■ ஏ.எச்.ஏ ஹூஸைன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவோருக்கான பயிற்சிகள் வழங்கல் தொடர்பான கலந்துரையாடல், மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை (01) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில், புதிய தொழிற்சாலைகளை அமைப்பது தொடர்பான சாத்திய வளம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. சர்வதேச தரத்திலான பொருட்களை உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்வதன் மூலம், மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கான செயற்றிட்டமாக அமைந்ததுடன் தொழில் முனைவோர்களுக்கு இலகு கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளதாக வளவாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் டொக்டர் சரங்க அழகப்பெரும, சபையின் பணிப்பாளர் நாயகம் ரத்னமாலா, பணிப்பாளர் டிக்வெல்ல, மாவட்ட உதவி செயலாளர் ஆ. நவேஸ்வரன் உட்பட துறைசார் நிபுணர்கள், தொழில் முனைவோர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

சீரற்ற வானிலை காரணமாக

## திருமலையில் கடும் பாதிப்பு

நாட்டில் நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக, நேற்று (02) மதியம்வரை பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 46 குடும்பங்களைச் சேர்ந்த 147 உறுப்பினர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 42 வீடுகள், நான்கு கட்டடங்கள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், திருகோணமலை நகர்ப் பகுதியில் அதிகளவான பாதிப்புகள் பதிவாகியுள்ளதோடு, பொதுவாக தம்பலகாமம், கந்தளாய், கோமரன்கடவெல, மொராவெவ, குச்சவெளி, மூதூர் போன்ற பிரிவுகளில் பாதிப்புகள் பதிவாகியுள்ளன. அவற்றிலும் நகர்ப் பகுதிகளில் கூடுதலான பாதிப்புகள் பதிவாகியுள்ளன.

பிரதேச செயலாளர்களின் அறிக்கையின் பிரகாரம் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கான நட்டஈடு கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் இவற்றின் முற்பணம் அடுத்தவாரமளவில் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வாழைச்சேனை நகைக்கடையில் திருட்டு

■ கனகராசா சரவணன்

வாழைச்சேனை பிரதான வீதியிலுள்ள நகைகடையில் இருந்து தங்க ஆபரணங்கள், பணம், அலைபேசி உட்பட ஆறு இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருட்டுப்போன சம்பவம் புதன்கிழமை (01) இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது; வாழைச்சேனை பிரதான வீதியில், பிரதேச சபை மைதானத்துக்கு முன்னால் உள்ள நகைக்கடையை உரிமையாளர் திறந்து, சாம்பிராணி போட்டுக் கொண்டிருந்த போது, வாடிக்கையாளர் ஒருவர் உடைந்த தங்க ஆபரணத்தை ஒட்டித்தருமாறு கோரியுள்ளார்.

இதையடுத்து, கடையைத் திறந்தபடியே வைத்துவிட்டு, அருகிலுள்ள தங்க நகை ஒட்டும் கடைக்கு வாடிக்கையாளருடன் சென்று, சுமார் 10 நிமிட இடைவெளியில் திரும்பிவருவதற்கு முன்னர், வீதியில் நின்று அவதானித்துக் கொண்டிருந்த திருடன், கடைக்குள் புகுந்து அங்கிருந்த 24 கிராம் 350 மில்லி கிராம் தங்க ஆபரணங்களையும் இரண்டு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பணம், மூன்று அலைபேசிகள் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளான்.

பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, கான்ஸ்டபிள் வை. தினேஸூக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் அல்போட் தலைமையிலான பொலிஸ் குழுவினர் வாழைச்சேனை உசேன் வைத்தியர் வீதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞனை கைது செய்ததுடன் திருடப்பட்ட பொருட்களை மீட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர், பிரதேசத்தில் நீண்ட காலமாக கொள்ளை சம்பவங்களில் தொடர்புடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு நீதிமன்றத்தில் இருந்து

## கைதி தப்பி ஓட்டம்

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு நீதிமன்றத்தில் இருந்து கைதி ஒருவர் தப்பி ஓடிய சம்பவம் நேற்று (02) பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள கருவப்பங்கேணி பிரதேசத்தில் கஞ்சாவுடன் நபரொருவரைக் கைது செய்த பொலிஸார், அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்று, நீதவான் அறையில் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த, கைதியின் விலங்கை பொலிஸார் கழற்றிய போது, குறித்த நபர் அங்கிருந்து ஓடி, நீதிமன்ற மதில் மீது எறி தப்பி ஓடியுள்ளார்.

இதையடுத்து, தப்பி ஓடிய நபரைத் தேடிவருவதுடன் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் ஒன்று சேருமாறு வேண்டுகோள்

### ஐக்கிய அமெரிக்க தமிழ்ச் செயற்குழு கடிதம்

■ வ. சக்தி

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஐக்கியப்பட்டு ஒன்று சேருமாறு ஐக்கிய அமெரிக்க தமிழ்ச் செயற்குழு (USTAG) வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையிலுள்ள சகல தமிழ்க் கட்சி தலைவர்கள், பாராளுமன்ற தமிழ் உறுப்பினர் ஆகியோருக்கு ஐக்கிய அமெரிக்காவில் செயற்படும் ஐக்கிய அமெரிக்க தமிழ்ச் செயற்குழுவின் (USTamil Action Group - USTAG) தலைவர் அனன் பொன்னம்பலம் அனுப்பியுள்ள கடிதத்திலே மேலுள்ளவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எந்த விதிவிலக்குமின்றி, தமிழ் அரசியலில் ஒற்றுமை என்பது முற்றிலும் இன்றியமையாததாக இருக்கும் இவ்வேளையில், அதற்கு நேர்மாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவது குறித்து, உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் தமிழர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்து துண்டாடப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பினுடைய ஐக்கியத்தை மீண்டும் நிறுவ முடியும் என்ற முன்மொழிவு, ஓர் ஆபத்தானதும் பொறுப்பற்றதுமான அனுமானமாகும். தனித்துச் செல்லும் ஒவ்வொரு தமிழ்க் கட்சிகளும் தேர்தலுக்குப் பிறகு, ஒற்றுமை என்ற நோக்கத்துக்காகப் பேசுவதற்கு எந்தத் தமிழ்ப் பிரதிநிதித்துவமும் இல்லாத அளவுக்கு, அழிவுகரமான முறையில் தமிழ் வாக்குகளைப் பிரித்துவிடும்.

புலம்பெயர் தமிழ் மக்களாகிய நாம், அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி தற்போதைய துர்ப்பாக்கிய உத்தியை மறுபரிசீலனை செய்யுமாறும் அனைத்து தமிழ்த் தேசிய கட்சிகளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக (TNA) ஒன்றிணையுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

மக்கள் விரும்புவது இந்த ஒற்றுமையைத்தான். நிரந்தர அரசியல் தீர்வு பற்றி இலங்கை அரசாங்கமும் சர்வதேச சமூகமும் பேசிக் கொண்டிருக்கும் காலத்தின் தேவையும் இதுவாகும்.

நமது மக்களின் நல்வாழ்வு, கண்ணியம், சுதந்திரம் ஆகியவை நமது தலைமைகளின் முதன்மையான குறிக்கோளாக இருக்கும்போது, ஒற்றுமை அடையப்படும் என்பது எங்கள் உறுதியான நம்பிக்கை என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யானைகளால் வாழ்வாதார பயிர்கள் அழிப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட விசுவமடு, நாச்சிகுடா பகுதியில் கடந்த சில தினங்களாக, காட்டு யானைகள் இரண்டு மக்கள் குடியிருப்பு பகுதியில் உள்ள பயிர்களை மிதித்து துவசம் செய்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பூசனிக்கொடிகள் பிஞ்சும் காயுமாக உள்ள நிலையில், அழிவுகளை ஏற்படுத்தி உள்ளதாகவும் 20க்கும் மேற்பட்ட தென்னங்கன்றுகளையும் முற்றுமுழுதாக அழித்து துவசம் செய்துள்ளதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டினார்கள்

வயது முதிர்ந்த நிலையிலும் நிம்மதியாக இரவு வேளைகளில் படுத்துறங்க முடியாத நிலை தொடர்வதாகவும் தமது ஜீவனோபாய பயிர்ச்செய்கைகள் அழிவடைவது தொடர்பாக மாவட்ட அரச அதிபர், கிராம சேவையாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்திய போதிலும் உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் தெரிவித்தார்கள்.

அரசியல்வாதிகளும் தேர்தல்காலத்தில் சொல்வது ஒன்றும் பின்னர் செய்வது ஒன்றாகவும் உள்ளது எனவும் இந்நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனவும் இந்நிலைதொடருமாயின் வாழ்வாதார பயிர்செய்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும் எனவும் கவலை தெரிவித்தார்கள்.

தமிழர்களும் சிங்களவர்களும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும்போது

## எதற்காக சுதந்திர தினக் கொண்டாட்டங்கள்?

■ மன்னார் நிருபர்




நாட்டில் மக்கள் பல விதங்களிலும் பாதிக்கப்பட்டுள்ள போதும் பல மில்லியன் ரூபாய் செலவு செய்து இந்த நாட்டின் சுதந்திர தின நிகழ்வுகள் கொண்டாட வேண்டுமா என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் ஒன்றிய தலைவி மனுவல் உதயசந்திரா கேள்வியெழுப்பினார்.

மன்னாரில் நேற்று (02) நடைபெற்ற ஊடக சந்திப்பில், அவர் மேலும் கூறியதாவது:

சுதந்திரம் இல்லாத இந்த நாட்டுக்கு சுதந்திர தினம் தேவையா? இந்த நாட்டில் மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் நிலையில், பல குடும்பங்கள் வாழ்வாதாரம் இன்றி, துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றன.

மீனவர்கள் தொழிலுக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளனர். விவசாயிகள் வீதிக்கு வரும் நிலையில் உள்ளனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள், வீதியில் இறங்கி, பல வருடங்களாக போராடி வருகிறோம். தமிழர்களாக இருந்தாலும் சிங்களவர்களாக இருந்தாலும் இந்த நாட்டில் மக்கள் பலவித பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில், யாருக்காக இவ்வளவு மில்லியன் ரூபாய் நிதி செலவு செய்து, இந்தச் சுதந்திர தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று மேலும் தெரிவித்தார்.

## ஐயன்கன்குளத்தில் இயங்காத சந்தை

■ நடராசா கிருஸ்ணகுமார்



முல்லைத்தீவு, ஐயன்கன்குளம் பொதுச் சந்தை இயங்காத நிலையில் காணப்படுகின்றது.

2012ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்ட இச்சந்தை இதுவரை இயங்காததன் காரணமாக, கட்டடம் கால்நடைகளின் உறைவிடமாக மாறியுள்ளது. 210 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற ஐயன்கன்குளத்தில், துணுக்காய் பிரதேச சபையால் அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடம், அப்போதைய அமைச்சர் ரிஷாட் பதியுதீனால் திறந்து வைக்கப்பட்டது.

ஆனால், இக்கிராமத்தில் சந்தையை இயக்குவதற்கான முயற்சிகளை, துணுக்காய் பிரதேச சபை மேற்கொள்ளவில்லை. இக்கிராமத்தின் மீன் வியாபாரிகள், தமக்கு விரும்பிய இடங்களில் வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். இதை ஒழுங்குபடுத்த வேண்டியது பிரதேச சபை. ஆனால் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக சந்தைக்காக அமைக்கப்பட்ட கட்டடம் பயனற்றதாகவே காணப்படுகின்றது.

இதேபோன்றே, கோட்டைக்கட்டியகுளம் கிராமத்தில் சந்தைக்காக அமைக்கப்பட்ட கட்டடம் நீண்ட காலமாக திறக்கப்படாமல் உள்ளது. பிரதேச சபை கட்டடங்களைக் கட்டுவதில் அக்கறை செலுத்துகின்றதே தவிர, அதனை மக்கள் பயன்பாட்டுக்காக மாற்றுவதற்கான எந்தவிதமான திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக பொது அமைப்புகளால் முன்வைக்கப்படுகின்றன.

## முத்துஐயன்கட்டு குளத்தின் வான்கதவுகள் திறப்பு

### மக்களை அவதானமாக இருக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வரும் நிலையில், கடந்த 24 மணி நேரத்துக்குள் முத்துஐயன்கட்டு நீரேந்துப் பகுதியில் 116 மி.மீ மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்ற நிலையில், அதிக நீர்வரத்து காரணமாக 24'00" கொள்ளளவுள்ள முத்துஐயன்கட்டு குளத்தின் நீர்மட்டம் 23'06" ஆகிய நிலையில் நான்கு வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.



அதனடிப்படையில், இரண்டு வான்கதவுகள் 09" உம், இரண்டு வான்கதவுகள் 1'3" உம் திறந்து விடப்பட்டுள்ளன. இந்நிலையில் தாழ்நில பகுதி மக்கள் அவதானமாக இருக்குமாறு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



ரதெல்ல விபத்து: பஸ் சாரதி

# பிணையில் விடுதலை

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

நானுஓயா- ரதெல்ல குறுக்க வீதியில் ஜனவரி 20ஆம் திகதிய விபத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

25,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளிலும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா நீதவான் நாலக சஞ்சீவ எதிரிசிங்க முன்னிலையில் பெப்ரவரி முதலாம் திகதி ஆஜர்படுத்தப்பட்ட போது, அவரை பிணையில் விடுதலை செய்ய நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஹொரணை- குடுஉதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடைய சாரதியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு- தேஸ்டன் பாடசாலை மாணவர்கள் கல்விச் சுற்றுலா சென்ற பஸ்ஸானது, இந்த மாதம் 20ஆம் திகதி மாலை ரதெல்ல குறுக்கு வீதியில் பயணித்த போது, எதிரே வந்த வேன் மற்றும் ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது வேனில் பயணித்த அறுவரும் ஓட்டோ சாரதியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மாணவர்கள் உள்ளிட்ட 53 பேர் காயமடைந்தனர்.



# பூப்பனையில் மகன் தாக்கியதில் தந்தை பலி

■ ஆ.ரமேஸ்

கந்தப்பளை, பூப்பனை மேல் பிரிவு தோட்டத்தின் கங்காணி லயம் என அழைக்கப்படும் லயக்குடியிருப்பில் மூத்த மகன், பொல்லால் தாக்கியதில் அவருடைய தந்தை மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (01) இரவு இடம்பெற்றுள்ளது. மூன்று பிள்ளைகளின் தந்தையான 45 வயதுடைய குமாரவேல் தியாகபிரகாஸ் என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மகன், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அயல் வீட்டார் இருவரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

உயிரிழந்தவரின் மனைவி வெளிநாட்டில் பணிப்பெண்ணாக தொழில் செய்து வருகின்ற நிலையில், உயிரிழந்தவர் தனது மூன்று மகன்மாருடன் வசித்து வந்துள்ளார்.

சம்பவம் தினத்தன்று மாதாந்த சம்பள பணத்தை பெற்ற அவர், 74 வயதுடைய தனது தாய், மூத்த மகன் ஆகியோருடன் மது அருந்தியுள்ளார். மாலை 05 மணிதொடக்கம் வீட்டில் சண்டையிட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

> **“ மாதாந்த சம்பள பணத்தை பெற்று, 74 வயதுடைய தனது தாய், மூத்த மகன் ஆகியோருடன் மது அருந்தியுள்ளார். மாலை 05 மணி தொடக்கம் நீடித்த வாய்த்தர்க்கம் 08 மணி வரை தொடர்ந்து பின்னர் கைகலப்பாக மாறி கொலையில் முடிந்தது.**

வாய்த்தர்க்கம் 08 மணி வரை தொடர்ந்து பின்னர் கைகலப்பாக மாறியுள்ள நிலையில், பின்னர் அயல் விட்டார் சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்கு ஓடிச் சென்று பார்த்த வேளையில், தந்தை இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார்.

அயல்வீட்டார் உடனடியாக சம்பவம் குறித்து கந்தப்பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு வருகை தந்த கந்தப்பளை பொலிஸாரிடம் தந்தையை தாக்கி கொலை செய்ததாக மூத்த மகன் ஒப்புக்கொண்டதால், அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும் உயிரிழந்தவரின் தாயாரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததையடுத்து, அயல் வீட்டைச் சேர்ந்த இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளங்கன் வைத்தியசாலைக்கு அருகில் பஸ் தரிப்பிடம்

# இன்மையால் அவதி

■ செ.தி. பெருமாள்

டிக்கோயா, கிளங்கன் ஆதார வைத்தியசாலை பகுதியில் பஸ் தரிப்பிடம் இன்மையால் நோயாளர்கள் பெரும் அவதியுறுகின்றனர்.

குறித்த வைத்தியசாலைக்கு பல பகுதிகளிலிருந்தும் தினமும் அதிகமானவர்கள் சென்று வரும் நிலையில், அங்கு பயணிகளுக்கான பஸ் தரிப்பிடம் அமைக்கப்படவில்லை என குற்றஞ்சுமத்துகின்றனர்.

குறிப்பாக மாதாந்தம் கிளினிக்குக்காகச் செல்லும் கர்ப்பிணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாகவும் அதிக மழை மற்றும் வெயில் காலங்களில் பஸ்ஸுக்காக காத்திருப்பதில் பெரும் அசௌகரியம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.



இந்த வைத்தியசாலைக்கு வருகைத் தரும் நோயாளிகள் மற்றும் பயணிகள் ஆகியோரின் நலன் கருதி, பஸ் தரிப்பிடத்தை அமைத்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள்

# உரிய சேவையை வழங்குவதில்லை

ஈரோஸ் ஜனநாயக முன்னணி குற்றச்சாட்டு



■ சுதத் எச். எம். ஹேவா

பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் அப்பகுதிகளுக்குரிய சேவையை வழங்குவதில்லை என தெரிவித்த ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பிரதான செயலாளர் ஜீவன் ஜீவராஜன், குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தின் சில உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுக்கு உரிய சேவையை வழங்குவதில்லை என்றார்.

அம்பகமுவ பிரதேசத்தில் உள்ளூராட்சி சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், தோட்டங்களுக்கு அருகிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் அப்பகுதிகளுக்கு உரிய சேவையை வழங்குகின்றனவா என்பது இன்று பாரிய கேள்வியாகவுள்ளது. குப்பைகள் முறையாக அகற்றப்படுவதில்லை. வீதிகள் முறையாக புனரமைக்கப்படுவதில்லை. இதனால் அப்பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் சில உள்ளூராட்சி உறுப்பினர்கள் தங்கள் நண்பர்கள் பெயரில் அந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை ஒப்பந்தம் செய்வதால், பொதுமக்களின் பணம் வீணாகச் செலவிடப்பட்டு வளர்ச்சிப் பணிகள் முறையாக நடைபெறாமல் உள்ளன.

இந்தத் தவறுகளை முறியடிக்கும் வகையில், நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ஒரு சில உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிட ஈரோஸ் நடவடிக்கை எடுத்துள்ளது என்றார்.



# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியில் மோதிய வேன்

7 பேருக்கு காயம்

■ நவி

கண்டி, கெலிஓயா நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியில் வேன் மோதி விபத்துக்குள்ளானதில் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (01) இரவு இடம்பெற்றுள்ளது.

கண்டியில் இருந்து நுவரெலியா பகுதிக்கு பயணித்துக் கொண்டு இருந்த வேன், லொறியின் பின்புறம் மோதியுள்ளது.

இதன்போது வேனுக்கு பலத்த சேதம் ஏற்பட்ட நிலையில் வேனில் இருந்த 7 பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சிவனொளிபாதமலைக்கு ரயிலில் வரும்

# யாத்திரிகர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

பாடசாலை விடுமுறையுடன் சிவனொளிபாதமலைக்கு வருகை தரும் யாத்திரிகர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அதிகளவான யாத்திரிகர்கள் ரயில் மூலம் வருகை தருவதாக ஹட்டன் ரயில் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கமைய, வார இறுதி நாள்களில் ரயில் மூலம் அதிகளவான யாத்திரிகர்கள் வருகைத் தருவதாகவும் இவ்வாறு ஹட்டன் ரயில் நிலையத்தை வந்தடையும் யாத்திரிகர்களுக்கு ரயில் நிலையத்திலிருந்து நல்லத்தண்ணி வரை இ.போ.ச பஸ்கள் பல சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், ரயில் மூலம் வருகை தரும் யாத்திரிகளுக்கு தேவையான வசதிகள் ஹட்டன் ரயில் நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், போதைப்பொருளுடன் வருகைத் தரும் யாத்திரிகர்கள் ஹட்டன் ரயில் நிலையத்திலேயே கைது செய்வதற்கான விசேட ஏற்பாடுகள் ஹட்டன் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மலையகத்தில் மந்த போசனத்தால்

# நிறை குறைந்த சிசுக்களின் பிறப்பு அதிகரிப்பு

■ எஸ்.கே.குமார்



மலையக பெருந்தோட்ட பகுதியில் மந்த போசனம் காரணமாக பெருந் தோட்டப் பெண்கள் பிரசவிக்கும் சிசுக்களில் 60 சதவீதமானவை நிறை குறைந்தவைகளாகப் பிறப்பதாக ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் நுவரெலியா தொகுதி அமைப்பாளரும் சமூக சேவையாளருமான சதாநந்தன் திருமுருகன் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் நுவரெலியா காரியாலயத்தில் நேற்று (02) நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இன்று மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வேலைக்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. அவர்களுக்கு கிடைக்கும் ஊதியம் போதாமையால் சத்துள்ள உணவு மாத்திரமல்ல மூன்று வேளை உணவு உண்பதற்கு கூட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இன்றைய வாழ்வாதார சூழ் நிலைக்கேற்ப பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கேட்டால், சம்பள உயர்வு வழங்க தோட்ட கம்பனிகள் மறுக்கின்றன.

தோட்டத்தொழிலாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் சம்பளம் போதமையால் பெருந்தோட்டப் பகுதியில் மந்த போசனம் அதிகரித்துள்ளது என்றார்.





# பதுளையில் பொங்கல் விழா



பதுளை மாவட்ட செயலகமும் பதுளை பிரதேச செயலகமும் இணைந்து, மாவட்ட செயலக வளாகத்தில் தைப்பொங்கல் விழாவை நடத்தியிருந்தன.

(எம். செல்வராஜ்)



# வாகன விபத்தில் இருவர் மரணம்

■ நவி

கம்பளை- நாவலப்பிட்டி பிரதான வீதியின் ஜயமாலப்புர எனும் இடத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கம்பளை நகரில் இருந்து நாவலப்பிட்டி நோக்கி பயணித்த கார், நாவலப்பிட்டி நகரில் இருந்து வெலம்பொட நகருக்கு பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

வெலம்பொட பிரதேசத்தை சேர்ந்த 19, 20 வயதுடைய இளைஞர்களே இந்த விபத்தில் உயிழந்துள்ளனர். மேலதிக விசாரணைகளை எத்கால்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மஹா கும்பாபிஷேகம்



■ ஆ.ரமேஸ்

உடப்புஸ்ஸலாவ - சென்மாக்றெட் தோட்ட ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழா எதிர்வரும் (05) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனையொட்டி இன்று (03) காலை சுபநேரத்தில் கிரியாரம்பம் இடம்பெற்று, நாளை (04) விசேட பூஜைகளுடன், காலை 10 மணி முதல் மாலை 05 மணிவரை பக்தர்களின் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

மறுநாள் (05) ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணி முதல் 11.30 மணிவரை அமையபெறும் சுப முகூர்த்த வேளையில், ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிக்கு பக்தஅடியார்கள் புடை சூழ வேத பாராயணங்களுடன் மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு நடைபெற உள்ளது.

இதை தொடர்ந்து பக்த அடியார்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்படுவதுடன் மகேஸ்வர பூஜையுடன் பகல் 12.30 மணிக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளதாக ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது.

# குட்டித் தேர்தலுக்கு இடையூறு விளைவிக்கும் ஜனாதிபதியின் கட்டளை

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடக்குமா, நடக்காதா? என்பது தொடர்பில் உறுதியாகக் கூறமுடியாத நிலையில், தேர்தல் களத்தில் குதித்திருக்கும் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் பிரசாரங்களில் தீவிரமாகக் குதித்துள்ளன. ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள், அவ்வளவாக அக்கறை காட்டவில்லை என்றே கூறவேண்டும்.

எனினும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆகியன கூட்டங்களை நடத்தி, தங்களுடைய மக்கள் பலத்தை காண்பித்துவருகின்றன.

25 மாவட்டங்களுக்கான தேர்தல் வர்த்தமானி வெளியிடப்பட்டு, வர்த்தமானி சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. எனினும், நிதியை ஒதுக்கிக்கொள்வதில், தேர்தல் ஆணைக்குழு கடுமையான சிரமங்களை எதிர்கொள்வதாக அறியமுடிகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வசமிருக்கும் நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சால் வெளியிடப்பட்டிருக்கும் சுற்றறிக்கை மற்றுமொரு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது என்பதை இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

அந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2023ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் 06 சதவீதத்தை இரத்துச் செய்தல் மற்றும் அரச செலவுகளை முகாமைத்துவம் செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. வரவு- செலவு திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை தவிர்த்து, ஏனைய அனைத்து மீண்டெழும் செலவுகளுக்கான மொத்த நிதியில் 06 சதவீதத்தை இரத்துச் செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம், பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கான நிவாரணங்களை வழங்குதல், சமுர்த்தி, முதியோர், சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு, ஊனமுற்றோருக்கான கொடுப்பனவு, கர்ப்பிணி தாய்மார்களுக்கான போஷாக்கு உணவுத் திட்டம், முன்பள்ளிகளுக்கான காலை நேர உணவு, போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களுக்கான போஷாக்கு உணவுத் திட்டம் ஆகியவற்றுக்கு எவ்வித இடையூறுகளும் ஏற்படாது.

எனினும், ஜனாதிபதியின் இந்தச் சுற்றறிக்கை தேர்தல் செயற்பாடுகளுக்கு இடையூறாக அமைந்துள்ளதென அறியமுடிகின்றது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாவும் கடன் அடிப்படையிலேயே தேர்தல் ஆணைக்குழு முன்னெடுக்கின்றது.

இவ்வாறான நிலையில் புதிய சுற்றறிக்கையின் பிரகாரம், ஏனைய திணைக்களங்களிடம் கடன் அடிப்படையில் வேலைகளை செய்யமுடியாத நிலைமை தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளது. எரிபொருளை பெற்றுக்கொள்ளல், முத்திரைகளை பெறல், அரச ஊழியர்களிடம் இருந்து சேவைகளை பெற்றுக்கொள்ளல் உள்ளிட்டவற்றுக்கே இடையூறு ஏற்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிய நாடு, இன்னுமே மீண்டெழவில்லை. இந்நிலையில், தேர்தலை மக்கள் கோரவில்லை. பொருளாதாரத்தை கட்டியெழுப்பி நாட்டை ஸ்திரமான நிலைமைக்கு கொண்டுவரவேண்டுமென விரும்புகின்றனர் என்பது, தேர்தலை எதிர்க்கும் சக்திகளின் வியாக்கியானமாகும். எனினும், ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு தேர்தல் அவசியமாகும் என்பதை நினைவில் கொள்வது அவசியம்.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


வலதுசாரி தீவிரவாதத்தின் நிழலில் – 13:

# ஜப்பானில் அதிவலதுசாரித்துவத்தின் எழுச்சி



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே, 2021 ஜூலை எட்டாம் திகதி, ஜப்பானிய மேலவைத் தேர்தலுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் நடைபெற்ற அரசியல் பிரசார நிகழ்வில், வீதியில் உரையாற்றிக் கொண்டிருந்த போது சுடப்பட்டு இறந்தார். இது ஜப்பானில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இன்றுவரை, இக்கொலைக்கான காரணங்கள் குறித்து பெரிதாகப் பேசப்படவில்லை.

ஆனால், ஜப்பானில் அதிவலதுசாரித்துவத்தின் எழுச்சியை விளங்கிக் கொள்ள இக்கொலைக்கான காரணியைப் புரிந்து கொள்வது முக்கியமானது. 41 வயதான சந்தேக நபர், வீட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியால் அபேயை சுட்டதாக ஒப்புக்கொண்டார். அவர், 'மதக்குழு' ஒன்றின் மீது வெறுப்பு கொண்டிருந்ததாக பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

தனது தாயார், குறித்த குழுவுக்கு பெரும் நன்கொடைகளை வழங்கியதன் காரணமாக, இறுதியில் திவாலான நிலைக்குச் சென்றதாகவும், அதனால் குறித்த மதக் குழுவின் தலைவரை தாக்க திட்டமிட்டதாகவும் கூறினார்.

கொலை நடந்து சில நாள்களின் பின்னர், சந்தேகநபரின் தாய், தம் மதக் குழுவைச் சேர்ந்தவர் என்றும் 1998ஆம் ஆண்டு தாயார் குழுவில் சேர்ந்து, 2002ஆம் ஆண்டில் திவாலானார் என்றும் 'யூனிஃபிகேஷன் சர்ச்' என்று பரவலாக அறியப்படும், உலக அமைதி மற்றும் ஒற்றுமைக்கான குடும்பக் கூட்டமைப்பு கூறியது.

ஜப்பானிய அரசியல் கட்சிகளும் ஊடகங்களும், இக்கொலையை 'ஜனநாயகத்துக்கு சவால்' அல்லது 'பேச்சு சுதந்திரத்தின் மீதான தாக்குதல்' என்று முத்திரை குத்தின. பொலிஸாரினதும் ஊடகங்களினதும் அறிக்கைகள், இந்தக் கொலை அரசியல் நோக்கம் கொண்டதல்ல என்று குறிப்பிடுகின்றன.

இருப்பினும், ஜப்பானில் இதுவரை சொல்லப்படாத ஒரு வலதுசாரி தேசியவாதியாக அபேயின் கடந்த காலத்தை, இந்தச் சம்பவம் வெளிப்படுத்தியது. மேலும், அவரது 'ஒரு வலிமையான' அரசியல் பிம்பத்தால், அவரது கடந்தகாலம் இருளில் புதைக்கப்பட்டது என்ற உண்மை பொதுவெளிக்கு வந்தது.

'யூனிஃபிகேஷன் சர்ச்'க்கும் அபேயின் தாராளவாத ஜனநாயகக் கட்சிக்கும் இடையிலான நெருங்கிய உறவு, ஜப்பானில் விவாதிக்கப்படாத ஒன்று. இச்சேர்ச்சானது 1954இல் தென் கொரியாவில் கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர் சன் மியுங் மூனால் நிறுவப்பட்டது. ஜப்பானிய கிளை 1959 இல் திறக்கப்பட்டது. மேலும், 1990களில், உலகம் முழுவதும் தீவிரமாக விரிவடைந்தது.

கம்யூனிசத்துக்கு எதிரான, தாராளவாத ஜனநாயகக் கட்சியின் நம்பகமான கூட்டாளிகளில் இந்தக் குழுவும் ஒன்றாகும். குறித்த சர்ச் தொடர்பான நிகழ்வுகளில், செப்டெம்பர் 2021இல் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்புடன் வீடியோ இணைப்பு மூலம், அதிவலதுசாரி ஆதரவாளர்களிடையே பேச்சாளராக அபே தோன்றினார். குறித்த சேர்ச்சை கம்யூனிச எதிர்ப்பு வலதுசாரி குழுவிலிருந்து பிரிக்க முடியாது என்ற வகையில், இரண்டுக்குமான உறவு இருந்தது.

'அசோசியேஷன் ஒப் ஸ்பிரிச்சுவல் லீடர்ஷிப்' என்ற மற்றொரு வலதுசாரி மதக் குழுவுடன் அபே ஷின்சோ தொடர்புகளைக் கொண்டிருந்தார். இம்மதக்குழு, ஏகாதிபத்திய ஜப்பானின் (1868 முதல் 1945 வரை) அதிகாரபூர்வ சித்தாந்தத்தைப் பின்பற்றுகிறது. இது 1997 இல் நிறுவப்பட்ட தீவிர வலதுசாரி தேசியவாத அமைப்பான 'நிப்பான் கைகி' (ஜப்பான் மாநாடு) உடன் நெருங்கிய உறவைக் கொண்டுள்ளது.

ஜப்பானின் வரலாற்றில் மிக அதிககாலம் பிரதமராக இருந்தவர் என்ற வகையில், ஜப்பானிய அரசியல் பண்பாட்டை அபே வழிப்படுத்தினார். அதில் அதிவலதுசாரித்துவத்தின் சாயல் மிகத் தெளிவாக இருந்தது.

இந்தப் பின்புலத்திலேயே ஜப்பானின் அதிவலதுசாரித்துவத்தின் வரலாற்றையும் சமகாலச் செயற்பாடுகளையும் நோக்க வேண்டியுள்ளது. ஜப்பானிய வலதுசாரிகளின் சித்தாந்தங்கள், வரலாறு முழுவதும் தொடர்ந்து உருவாகி வந்தாலும், ஜப்பானிய வலதுசாரி அரசியலின் பரிணாம தளத்தை வடிவமைத்த அரங்காடிகளின் பன்முகத்தன்மை கொண்ட குழுக்கள், பேரரசர் மீதான அவர்களின் ஒற்றை பக்தி, மரியாதை ஆகியவற்றில் ஒன்றுபட்டுள்ளன.

ஜப்பானிய வலதுசாரி இயக்கங்கள் முதலில், 'ஐரோப்பிய மயமாக்கல்' நோக்கிய போக்குகளுக்கு எதிரான ஓர் இயக்கமாகவும், பின்னர், 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜப்பானிய ஏகாதிபத்திய விரிவாக்கத்தை நியாயப்படுத்தும் ஓர் அணிதிரட்டல் சக்தியாகவும் உருவெடுத்தன.

1895 முதல் 1945 வரை, ஐந்து பெரிய போர்களின் (சீன-ஜப்பானியப் போர், ரஷ்ய-ஜப்பானியப் போர், முதலாம் உலகப் போர், இரண்டாம் சீன-ஜப்பானியப் போர், பசிபிக் போர்) விளைவாக, ஆசியாவில் கொரியா, தாய்வான், மஞ்சூரியா, தென்கிழக்கு ஆசியா முழுவதும், கடலோர சீனாவின் பெரும்பகுதி, மேற்கு பசிபிக் பகுதியின் பெரும்பாலான தீவுகள் முழுவதும் பரந்து விரிந்த அகண்ட பேரரசை ஜப்பான் உருவாக்கியது. ஐரோப்பிய ஏகாதிபத்தியத்துக்குச் சவால் விடும் ஆசியர்களின் ஒரு பெரிய குடும்பத்தின் தந்தையாக சித்திரிக்கப்பட்ட ஜப்பானிய பேரரசரின் கீழ், பான்-ஆசியவாதத்தின் வலதுசாரி சித்தாந்தங்கள், கொலனித்துவ விரிவாக்கத்தில் முன்னணியில் இருந்தன.

இரண்டாம் உலகப்போரின் முடிவில் ஒரு நிறுவனமாக பேரரசர் அமைப்பு இருந்தபோதும், பேரரசரது அதிகாரமும் மற்றும் தெய்வீக அந்தஸ்தும் பறிக்கப்பட்டது. மேலும், பேரரசரை ஒரு வெறும் பிரமுகராக புதிய ஜப்பானிய அரசியலமைப்பு மாற்றியது. இது போருக்கு முந்தைய அதிவலதுசாரிக் குழுக்களின் 'பேரரசருக்கான விருப்பு' என்ற அடிப்படையை சரித்தது.

இருந்தபோதும் ஜப்பானில் 'கம்யூனிச அபாயம்' குறித்து, அமெரிக்கா கவலைகொண்டது. ஜப்பானில் கம்யூனிசம் காலூன்றாமல் பார்த்துக் கொள்ள, இந்த அதிவலதுசாரி குழுக்களை பயன்படுத்தியது. இக்குழுக்கள் கட்டற்ற வன்முறையில் ஈடுபட்டன. இடதுசாரித் சித்தாந்தத்தைப் பின்பற்றுவோர் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

1960ஆம் ஆண்டு, ஜப்பானிய சோசலிசக் கட்சியின் தலைவர் அசனுமா இனெஜிரோவ் அதிவலதுசாரி செயற்பாட்டாளர்களால் கொலை செய்யப்பட்டார். 1970களில் மெதுமெதுவாக அதிவலதுசாரித்துவம் நிறுவனமாகத் தொடங்கியது.

1980களில், அதிவலதுசாரி செயற்பாட்டாளர்கள், சிறியளவில் அமைப்பாகத் தொடங்கினர். இடதுசாரிகள் செயற்படுவது போல, அவர்கள் அடிமட்ட அணிதிரட்டல் செயற்பாடுகளில் இறங்கினர். பரந்துபட்ட பொதுமக்கள் ஆதரவுத்தளத்தை உருவாக்க முனைந்தனர்.

இவ்வமைப்புகளின் தலைவர்களில் இனவாதிகளும் அடங்குவர். இவர்கள் 1960, 1970களில் மாணவர் இயக்கங்களின் இடதுசாரிகளின் எழுச்சிக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள். இவர்கள் சிறிய அமைப்புகளாகிய போது, அவர்களின் நடவடிக்கைகள் பெரும்பாலும் கவனிக்கப்படாமல் போனது. ஆனால் இவர்களின் பணிகள், அபேயின் எழுச்சிக்கு உதவின. 1990களின் ஆரம்பத்தில் இந்த அடிமட்ட முயற்சிகள் பலனளிக்கத் தொடங்கின. இத்தோடு அபேயின் அரசியல் எழுச்சி இடைவெட்டுகிறது.

பிரதான குடிமக்கள் மத்தியில் அதிகாரத்தையும் செல்வாக்கையும் குவிப்பதில் வெற்றி பெற்ற முதல் பெரிய வலதுசாரி அமைப்பு 'ஜப்பான் மாநாடு' ஆகும். இது 1997இல் மதம் மற்றும் இராணுவம் சார் சிவில் அமைப்புகளை ஒன்றிணைத்து, ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்கியது.

'ஜப்பான் மாநாடு' 1995இல் ஒரு குறிப்பிடத்தக்க சம்பவத்தின் பின்னர் மிகுந்த செல்வாக்குள்ளதாக மாறியது. அவர்கள் கொலனித்துவம் மற்றும் போரில் ஜப்பானின் பங்குக்கு மன்னிப்பு கேட்கும் அதிகாரபூர்வ அறிக்கையை வெளியிடும் அப்போதைய பிரதம மந்திரி முராயமா டோமிச்சியின் முயற்சியை வெற்றிகரமாகத் தடுத்தனர்.

அபேயின் எழுச்சியுடன், 'ஜப்பான் மாநாடு' ஒரு சக்திவாய்ந்த அரசியல் அமைப்பாக மாறியது. நாற்பதாயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்களைக் குவித்து, அபேயின் தாராளவாத ஜனநாயகக் கட்சி மற்றும் அடிமட்ட அமைப்புகளுடன் வலுவான தொடர்புகளைப் பெற்றுள்ளது. அபேயின் அமைச்சரவையில் பெரும்பாலானோர் ஜப்பான் மாநாட்டைச் சேர்ந்தவர்கள்.

இந்தப் போக்குக்கு முரண்பாடாக, ஜனநாயக ஆட்சிகள் மற்றும் சமத்துவத்துவத்துக்கான இடதுசாரி அழைப்புகள், 1970 களுக்குப் பிறகு முக்கியத்துவத்தை இழந்தன. அதிவலது செயற்பாட்டாளர்களால் ஏகாதிபத்திய சித்தாந்தங்களை பொது ஆர்ப்பாட்டங்கள், அரசாங்க பரப்புரை, ஒன்லைன் மனுக்கள் போன்ற ஜனநாயக வழிமுறைகள் மூலம் பிரபலப்படுத்த முடிந்தது.

இடதுசாரிகளாலும் ஜனநாயகவாதிகளாலும் பயன்படுத்தப்படும் மக்கள்நோக்கு ஆயுதங்கள், இன்று ஜப்பானிய அதிவலதுசாரிகளால் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இது கடந்த தசாப்தத்தில் சிறுபான்மையினரைத் தாக்கும் அடிமட்ட இயக்கங்களின் அமைதியான பெருக்கத்துக்கும் திடீர் எழுச்சிக்கும் களம் அமைத்தன. அதிவலதுசாரி சிந்தனையில் இந்த முக்கியமான மாற்றத்தைப் புரிந்து கொள்வது அவசியம். ஜனநாயக வழிமுறைகளை ஆசிய அதிவலதுசாரித்துவம் வெற்றிகரமாகப் பயன்படுத்துகிறது. இதன் நீட்சியை இலங்கை, இந்தியா போன்ற பல ஆசிய நாடுகளில் காணலாம்.



## வாழ்வியல் தரிசனம்

ஒருசிலர் வாழ்க்கையைப் பற்றி பயமுறுத்தியபடியே இருப்பார்கள். அடிக்கடி உலகில் நடக்கும் கஸ்டங்கள், துன்பங்களை மட்டுமே பேசிக்கொண்டிருப்பார்கள்.

எழுச்சி தரும் விடயங்கள், களிப்பூட்டும் அனுபவங்களை நினைப்பதே இல்லை. வெளிஉலகை நோக்காமல் பயந்தபடி வாழ்வது மட்டுமன்றி, தன்னைச் சுற்றி இருப்பவர்களுடனும் துணிச்சலற்ற பேச்சுகளையே பேசுவார்கள். இத்தகையோருடன் பழகுவதே கஸ்டம்.

மக்கள் நிறைந்து வாழும் பூமியில் அச்சத்துடன் வாழக்கூடாது. எதையும் எதிர்கொள்ளத் தயங்கக்கூடாது. தேவையற்ற சில விடயங்களில் இருந்து விலகவேண்டும். தெருவில் ஒருவன் போதையில் அலட்டினால், அதைக் கேட்டு இரசிக்கக்கூடாது.

தெருவில் எவராவது சண்டையிட்டால், திரும்பிப் பார்த்து அதை விமர்சிப்பது முட்டாள்தனம். இதனால், தேவையற்ற கும்பலுடன் மல்லுக்கட்ட வேண்டி ஏற்படலாம்.

உலகில் இரசிக்க வேண்டிய விடயங்கள் பலவுண்டு. தகாததைப் பார்ப்பதே தவறானது. பெறுமதியான காலத்தை இழக்கலாமா? நல்லதை நோக்குக; அனுபவியுங்கள்!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

மணல் அகழ்வால்

### பழைய முறிகண்டி பிரதான வீதி சேதம்

தொடரும் மணல் அகழ்வால், பழைய முறிகண்டி கிராமத்தின் பிரதான வீதி சேதமடைந்து உள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

2010ஆம் ஆண்டு முதல், தமது கிராமத்தில் இருந்து மணல், வெளி இடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் ஆகியோருக்கு பல தடவைகள் முறைப்பாடுகள் செய்தும், கிராமத்தின் மணல் அகழ்வு தடுத்து நிறுத்தப்படவில்லை என்றும் முறைப்பாடு தெரிவிக்கிறார்கள்.

நாற்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற கிராமத்தில், ஆற்றுபடுகைகளில் தொடர்கின்ற மணல் அகழ்வால், குளத்தின் அணைக்கட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் மணலுடன் செல்லும் டிப்பர்களால் கிராமத்தின் பிரதான வீதி கடுமையாக சேதமடைந்து இருப்பதாகவும் தொடரும் மணல் அகழ்வு தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலைமை காணப்படுவதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கிறார்கள்.

இதேவேளை ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான், தேறாங்கண்டல் கிராமங்களில் நடைபெறுகின்ற மணல் அகழ்வு, மரங்கடத்தல் தொடர்பாக, இரணைமடுவில் உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் மனு கையளிக்க உள்ளதாகவும் கிராமங்களின் பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன.

நடராசா கிருஸ்ணகுமார்



மும்பை

‘ஹிண்டன்பர்க் சர்ச்சை‘;

# 1 ஆம் இடத்தை இழந்தார் அதானி

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல ஆய்வு நிறுவனமான ‘ஹிண்டன்பர்க் ‘கடந்த 24 ஆம் திகதி அதானி குழுமம் தொடர்பான ஆய்வறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

அதில், பங்குச் சந்தையில் தனது பங்குகளின் மதிப்பை உயர்த்திக் காட்டுவதற்காக அதானி குழுமம் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், அதானி குழுமத்திற்குச் சொந்தமான நிறுவனங்களின் பங்குகள் , பங்குச் சந்தையில் நாளுக்கு நாள் சரிவடையத் தொடங்கியுள்ளது.

இதன் காரணமாக அதானி குழுமத்திற்கு கடந்த 5 நாள்களில் மாத்திரம் இந்திய மதிப்பில் சுமார் 7.44 லட்சம் கோடிரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, அதானி குழுமத்தின் மொத்த சொத்து மதிப்பில் மூன்றில் ஒரு பங்காகும். இதன் விளைவாக, கடந்த ஒரு வாரத்துக்கு முன்பாக, உலகப் பணக்காரர்கள் பட்டியலில் 3 ஆவது இடத்தில் இருந்த கௌதம் அதானி 15ஆவது இடத்திற்குச் சென்றுள்ளார்.

அதேசமயம் ஆசியாவின் 1




ஆவது பணக்காரர் என்ற அந்தஸ்தையும் அவர் தற்போது இழந்துள்ளார்.

இந்நிலையில், இழப்புகளில் இருந்து முதலீட்டாளர்களைக் காக்க வே பங்கு விற்பனை இரத்து செய்யப்பட்டது என்றும், பங்கு விற்பனை இரத்து முடிவால் நிறுவனத்தின் எதிர்கால திட்டங்களில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என அதானி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் உலக பணக்காரர்கள் வரிசையில் 9ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ள முகேஷ் அம்பானி, ஆசியாவின் பணக்காரர்கள் வரிசையில் முதல் இடத்தைப் பிடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

செகந்திராபாத்

## இப்படியா சிக்குவது?





ஆந்திராவில் செகந்திராபாத் அருகே அண்மையில் இளைஞர் ஒருவர் இரு பாறைகளுக்கு இடையே சிக்கிக் கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

சம்பவ தினத்தன்று செகந்திராபாத் அருகே உள்ள திருமலகிரி மலை மீது நடந்து சென்ற ராஜு என்ற குறித்த இளைஞர், எதிர்பாராத விதமாக மலையில் இருந்து கால் தவறி கீழே விழுந்துள்ளார்.

இதில் இரு பாறைகளுக்கு நடுவில் ராஜு சிக்கிக் கொண்டார். இந்நிலையில் பொதுமக்கள் அளித்த தகவலின் பேரில் அங்கு வந்த பொலிஸார், தீயணைப்புத்துறையினரின் உதவியுடன் பாறை இடுக்கில் சிக்கி கொண்டிருந்த ராஜுவுக்கு தண்ணீர், உணவு ஆகியவற்றை கொடுத்து நீண்ட நேரப் போராட்டத்திற்குப் பின்னர் அவரைப் பத்திரமாக மீட்டுள்ளனர்.

கேரளா



## வைத்தியர் முன் நிர்வாணமாக நின்ற இளைஞர் கைது

கேரளாவில் சுகாதாரத்துறை சார்பில் பொது மக்களின் நலன் கருதி ‘இ சஞ்சீவினி’ என்ற மருத்துவ பரிசோதனை திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் மூலம் நோயாளிகளுக்கு மருத்துவர்களால் ஒன்லைனில் மருத்துவ பரிசோதனை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் பெண் வைத்தியர் ஒருவர் வழக்கம் போல் ஒன்லைனில் மருத்துவ ஆலோசனையில் ஈடுபட்டிருந்த போது ,21 வயதான இளைஞர் ஒருவர் திடீரென தனது ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக வைத்தியர் முன்னிலையில் காட்சியளித்துள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த வைத்தியர் உடனடியாகத் தனது ஒன்லைன் இணைப்பைத் துண்டித்துள்ளார். பின்னர் இதுகுறித்து சைபர் கிரைம் மற்றும் ஆரன்முளா பொலிஸ் நிலையத்திலும் அவர் புகார் அளித்துள்ளார்.

அதன்பேரில் வழக்குப்பதிவு செய்தபொலிஸார், குறித்த இளைஞரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னை

## விமான நிலையத்தில் திரையரங்கம்




இந்தியாவிலேயே முதன்முறையாக, சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில், நேற்று முன்தினம்(01) திரையரங்கமொன்று திறக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்துக்கு முன்கூட்டியே வந்து காத்து இருக்கும் பயணிகள், மாற்று விமானத்துக்காக அதிக நேரம் காத்து இருக்கும் பயணிகள், வெளிநாடுகளில் இருந்து வரும் உறவினர்களை வரவேற்க வந்து காத்திருப்பவர்கள் ஆகியோரைக் கருத்தில் கொண்டே குறித்த திரையரங்கம் திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இத்திறப்பு விழாவில் நடிகர்கள் சதீஷ், ஆனந்த்ராஜ், கூல் சுரேஷ், இயக்குனர் வெங்கி, தயாரிப்பாளர் விஜய்பாண்டி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

5 திரைகளைக் கொண்ட இத் திரையரங்கங்களில் ஒரே நேரத்தில் 1000 பேர் அமர்ந்து படம் பார்க்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

மேலும் கூடிய விரைவில் உணவு விடுதிகள், சில்லறை கடைகள் என்பனவும் அங்கு திறக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புது டெல்லி



## அதற்கு மறுத்த தந்தை; கொலை செய்த மகன்

டெல்லியில் போதைப்பொருள் வாங்குவதற்கு பணம் தர மறுத்த தந்தையை, மகனே அடித்துக் கொலை செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வடமேற்கு டெல்லியின் சுபாஷ் பிளேஸ் பகுதியிலேயே இக்கொடூர சம்பவம் அரங்கேறியுள்ளது.

சம்பவ தினத்தன்று, போதைப் பொருளுக்கு அடிமையான அஜெய் என்ற இளைஞர் தனது தந்தை சுரேஷிடம் போதைப் பொருள் வாங்குவதற்கு பணம் தருமாறு வற்புறுத்தியுள்ளார்.

எனினும் சுரேஷ் பணம் தர மறுத்ததால் இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதில் ஆத்திரமடைந்த அஜெய் தனது தந்தையைக் கட்டையால் அடித்துக் கொலைசெய்துள்ளார் .

இந்நிலையில் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் அஜெய்யைக் கைது செய்துள்ளனர். அத்துடன் சுரேஷின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

## நடுவானில் அரை நிர்வாணம்

மும்பை



அண்மையில் அபுதாபியில் இருந்து மும்பை நோக்கிப் பயணித்த டாடாவின் விஸ்தாரா விமானத்தில், இத்தாலியைச் சேர்ந்த பெண்ணொருவர் ஒழுங்கீனமாக நடந்துகொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ தினத்தன்று எகொனொமி வகுப்பு பயணச் சீட்டை வைத்திருந்த ‘பாவ்லா பெரூசியோ‘என்ற குறித்த பெண், கூடுதல் வசதி கொண்ட வணிக வகுப்பில் அமரச் சென்றுள்ளார்.

இந்நிலையில் அவரைத் தடுத்து நிறுத்திய விமானப் பணியாளரை ‘பெரூசியா‘ தாக்கியதோடு, அருகில் இருந்தவர் மீது எச்சில் உமிழ்ந்ததாகவும், தனது ஆடைகளைக் களைந்து அரை நிர்வாணமாக நின்று ரகளை செய்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.

மேலும் இச்சம்பவம் அனைத்தும், விமானம் பறந்துக் கொண்டு இருக்கும் போதே இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் மும்பை பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு விசாரணை இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோல்ட் கொயின் ஃபீட் மில்ஸ் லங்காவின் உரிமை

# நியு அந்தனீஸ் பார்ம்ஸ் வசம்

நியு அந்தனீஸ் பார்ம்ஸ் (பிரைவட்) லிமிடெட், Aboitiz Equity Ventures Inc. (“AEV”) இன் துணை நிறுவனமான Pilmico International Pte. Ltd இடமிருந்து கோல்ட் கொயின் ஃபீட் மில்ஸ் (லங்கா) லிமிடெட்டின் 100 சதவீத உரிமையாண்மையை கொள்வனவு செய்துள்ளது. அதன் பிரகாரம், இந்நிறுவனம் இனி அந்தனீஸ் ஃபீட் என அழைக்கப்படும்.

நியு அந்தனீஸ் பார்ம்ஸினால் தற்போது முழுமையாக கையகப்படுத்தப்பட்டுள்ள நிலையில். தற்போது உற்பத்திச் செயன்முறையை முழுமையாக நிர்வகிக்க முடிவதுடன், வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் தரத்தை மேலும் மேம்படுத்தி, உற்பத்தி வினைத்திறனை மேம்படுத்தக்கூடியதாகவும் அமைந்துள்ளது.
இலங்கையிலிருந்து கோழி இறைச்சி உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதில் முன்னோடிகளாக நியு அந்தனீஸ் திகழ்வதுடன், இந்தக் கையகப்படுத்தலினூடாக, நிறுவனத்தின் ஏற்றுமதி வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்தும் இலக்குக்கு ஆதரவளிப்பதாகவும், அதனூடாக நாட்டுக்கு பெறுமதி வாய்ந்த அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்வதற்கு ஆதரவளிப்பதாகவும் அமைந்துள்ளது.

டிசம்பர் மாத நடுப்பகுதியில் இரு நிறுவனங்களுக்கிடையிலான உத்தியோகபூர்வ கைச்சாத்திடலுடன் இந்த கையகப்படுத்தல் பணிகள் பூர்த்தியடைந்திருந்தன. நியு அந்தனீஸ் நிறுவனத்தின் சட்ட ஆலோசகர்களாக நித்தியா பார்ட்னர்ஸ் செயலாற்றியதுடன், கொள்வனவாளரின் நிதி



ஆலோசகராக சமிந்த வீரசிங்க CFA இயங்கினார். விற்பனையாளரின் பிரத்தியேக நிதி ஆலோசகராக TWCorp (Pvt) Ltd இயங்கியதுடன், சட்ட ஆலோசகராக ஜுலியஸ் அன்ட் கிறீஸி இயங்கியிருந்தது.

நியு அந்தனீஸ் குழுமத்தின் தவிசாளர் எமில் ஸ்டான்லி கருத்துத் தெரிவிக்கையில், “நியு அந்தனீஸைப் பொறுத்தமட்டில் இது மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணமாக அமைந்துள்ளது. Aboitiz குழுமத்திடமிருந்து விலங்கு உணவு வியாபாரத்தை கையகப்படுத்தியுள்ளமையினூடாக, எமது வியாபாரத்தை சிறப்பாக மேம்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், அதனூடாக சர்வதேச கோழி இறைச்சி சந்தையில் புகழ்பெற்ற வர்த்தக நாமமாகத் திகழும் எமது நோக்கத்தை எய்துவதற்கு உதவியாக அமைந்திருக்கும். எம்மீது கொண்டுள்ள நம்பிக்கைக்காக Aboitiz குழுமத்துக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இந்தக் கொடுக்கல் வாங்கலைப் பூர்த்தி செய்ய உதவியமைக்காக TWCorp க்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.” என்றார்.

நியு அந்தனீஸ் பிரதம நிறைவேற்று அதிகாரியும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான நீல் சுரவீர கருத்துத் தெரிவிக்கையில், “பல காரணிகளைக் கவனத்தில் கொள்கையில் இது உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாக அமைந்துள்ளது. விலங்கு உணவுத் துறையில் எமது நிலையை இந்த கையகப்படுத்தல் மேலும் வலிமைப்படுத்துவதாக அமைந்திருக்கும் என்பதுடன், அதனூடாக கோழி இறைச்சியை தடங்கலின்றி விநியோகிக்கக்கூடியதாக இருக்கும். மேலும், உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் அதிகரித்துச் செல்லும் கேள்வியை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் இயங்கவும் உதவியாக அமைந்திருக்கும்.” என்றார்.

நியு அந்தனீஸ் நிறுவனத்தின் அத்திவாரமாக பண்ணையாளர்கள் திகழ்வதுடன், தேசத்துக்கு அவசியமான சரியான புரதச் சத்து கிடைப்பதை இந்தப் பண்ணையாளர்கள் உறுதி செய்கின்றனர். இதன் பெறுபேறாக, நாட்டினுள் எந்தளவில் காணப்பட்டாலும், இந்த விலங்கு உற்பத்தியாளர்களில் நாட்டின் பெருமளவான சனத்தொகை தங்கியுள்ளது. நியு அந்தனீஸ் போன்ற உற்பத்தியாளர்கள் காரணமாக, சூழலுக்கு நட்பான வியாபார செயன்முறைகளை தேசிய மட்டத்தில் முன்னெடுக்கக்கூடியதாகவுள்ளது.

சிறியளவு மற்றும் பாரியளவிலான விலங்கு உற்பத்திக் கட்டமைப்புகளை மாற்றியமைக்கும் பணிகளுக்கு நியு அந்தனீஸ் ஆதரவளித்து, பொருளாதார, சமூக மற்றும் சூழல் அடிப்படையில் நிலைபேறான வழிமுறைகளில் கால்நடை பங்களிப்புக்கும் விநியோக சங்கிலித் தொடர் பணிகளையும் அதிகரிக்கச் செய்வதற்கும் ஆதரவளிக்கின்றது.

## SLIM உடன் SLT பயிற்சி நிலையம் உடன்படிக்கை




SLT-MOBITEL இன் பயிற்சி நிலையம் (SLTTC), இலங்கையில் சந்தைப்படுத்தலுக்கான தேசிய அமைப்பான இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகத்துடன் (SLIM) முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. இதனூடாக தேசத்தின் விற்பனைச் செயலணியினரை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

உடன்படிக்கையின் பிரகாரம், SLTTC இல் பிரேரிக்கப்பட்ட விற்பனை முகாமைத்துவத்துக்கான தேசிய டிப்ளோமா (NDSM) கற்கையை SLIM வழங்கும். ஒன்பது மாத கால கற்கையில் டிஜிட்டல் மற்றும் சமூக விற்பனை, தந்திரோபாய விற்பனை முகாமைத்துவம் மற்றும் விற்பனை எதிர்வுகூரல், திட்டமிடல் மற்றும் கட்டணமிடல், மக்களை நிர்வாகித்தல் மற்றும் செயற்திறன் போன்றன அடங்கியிருக்கும். இதனூடாக விற்பனை செயலணிக்கு அவசியமான திறன்கள் கட்டியெழுப்பப்படும்.

SLT பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க மற்றும் SLIM கல்வியகத்தின் தலைவர் ஜனக சில்வா ஆகியோரிடையே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. திறன் விருத்தி பொது முகாமையாளர் ஜனக சில்வா, SLT-MOBITEL திறன் விருத்தி நிலையத்தின் பிரதி பொது முகாமையாளர் ஆசிரி இந்திக, SLIM இன் பிரதம நிறைவேற்று அதிகாரியும்

> **Outside Plant network, Data communication, IT, Management போன்ற பிரிவுகளில் பல மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சார் பயிற்சிகளை SLTTC வழங்குகின்றது**

நிறைவேற்று பணிப்பாளருமான சனத் சேனநாயக்க, வியாபார அபிவிருத்தி பிரதி பொது முகாமையாளர் மிஹிரினி பொன்சேகா, கூட்டாண்மை விற்பனைகள் முகாமையாளர் அசங்க செனெவிரட்ன ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பயிற்சி நடவடிக்கைகளினூடாக நிறுவனத்தின் மனித வளங்களை கட்டியெழுப்பும் நோக்கில் SLTTC நிறுவப்பட்டிருந்தது. ஆனாலும், தற்போது இந்நிலையத்தின் கற்கைகளுக்கு காணப்படும் வரவேற்பின் காரணமாக, நிலையத்தினால் ஒன்றுக்கு மேற்பட்ட தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் போன்றன பரந்தளவு தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் காணப்படும் நிபுணர்கள், ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இன்றைய காலகட்டத்தில், இந்த நிலையத்தினால் பெறுமதி வாய்ந்த அறிவு வழங்கப்படுவதுடன், இதனூடாக வழங்கப்படும் பரந்தளவு பிரயோக அனுபவத்தினூடாக இலங்கையின் அறிவுப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் பல வருட காலமாக கட்டியெழுப்புவதில் பங்களிப்பு வழங்குகின்றதையிட்டு பெருமை கொள்கின்றது.

புகழ்பெற்ற தகைமை அமைப்புகளுடனான கைகோர்ப்பினூடாக, SLTTC இனால் City & Guilds (UK)மற்றும் Pearson (UK), நுட்பவியலாளர்கள் சான்றிதழ்கள் மற்றும் HND டிப்ளோமாக்கள் போன்றன இலத்திரனியல், மின்னியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் துறைகளில் வழங்கப்படுகின்றன.

University of Hertfordshire இனால் SLTTC ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனூடாக, மூன்றாண்டு காலப்பகுதிக்கான Bachelor of Engineering (BEng) பட்டக் கல்வி வழங்கப்படுகின்றது. உலகில் காணப்படும் 1000 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக University of Hertfordshire அமைந்துள்ளதுடன், தெற்காசிய பிராந்தியத்தில் BEng (Hons) Engineering பட்டக் கற்கைகளை முன்னெடுப்பதற்கான ஏக உரிமையை SLTTC கொண்டுள்ளது.

Outside Plant network, Data communication, IT, Management போன்ற பிரிவுகளில் பல மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சார் பயிற்சிகளை SLTTC வழங்குகின்றது. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அனுமதி பெற்ற கல்வியகம் எனும் வகையில், இந்த நிலையத்தினால் உயர் தரம் வாய்ந்த பயிற்சி நெறிகள் வழங்கப்படுவதுடன், இவற்றினூடாக, பிரயோகசார் அறிவு வழங்கப்படுவது மாத்திரமன்றி, அவசியமான நடைமுறைசெயற்பாட்டு திறன்களும் வழங்கப்படுகின்றன.

நியூசிலாந்துக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய இந்தியா



நியூசிலாந்துக்கு எதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரை இந்தியா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் நியூசிலாந்தும், இரண்டாவது போட்டியில் இந்தியாவும் வென்றிருந்த நிலையில், அஹமதபாத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மூன்றாவது போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே 2-1 என்ற ரீதியில் தொடரை இந்தியா கைப்பற்றியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியாவின் பதிலணித்தலைவர் ஹர்டிக் பாண்டியா, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, ஆரம்பத்திலேயே இஷன் கிஷனை மிஷெல் பிறேஸ்வெல்லிடம் இழந்தபோதும் ஷுப்மன் கில்லின் ஆட்டமிழக்காத 126 (63), ராகுல் ட்ரிபாதியின் 44 (22), பாண்டியாவின் 30 (17), சூரியகுமார் யாதவ்வின் 24 (13) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில், டரைல் மிற்செல் 1-0-6-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 235 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, பாண்டியா (4), அர்ஷ்டீப் சிங் (2), உம்ரான் மலிக் (2), ஷிவம் மவியிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 12.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 66 ஓட்டங்களையே பெற்று 168 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக கில்லும், தொடரின் நாயகனாக பாண்டியாவும் தெரிவாகினர்.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# ஷ்ரேயாஸ் ஐயர் இல்லை

அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் ஷ்ரேயாஸ் ஐயரால் பங்கேற்க முடியாமல் போயுள்ளது.

தேசிய கிரிக்கெட் அகடமிக்கு உடற்றகுதிச் சோதனைக்காக நேற்று முன்தினம் சென்றிருந்த ஐயருக்கு, முதுகுப் பகுதி உபாதையிலிருந்து குணமடைவதற்கு மேலதிக நேரம் தேவை எனக் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில் ஐயர் இல்லாத நிலையில், ஷுப்மன் கில் அல்லது லோகேஷ் ராகுல் மத்தியவரிசையில் விளையாடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.





முல்லை மரதனோட்டப் போட்டி

# கேமா, சுபராஜ் வென்றனர்

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் குமுழமுனை கிராமத்தின் மைந்தன் கந்தசாமி பத்மநாதனின் பூரண நிதிப் பங்களிப்பில் மாபெரும் மரதனோட்டப் போட்டியானது, மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க.விமலநாதன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
ஆண்களுக்கான மரதனோட்டப் போட்டியானது முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி முன்பாக ஆரம்பித்து முள்ளியவளை முல்லைத்தீவு பிரதான வீதியூடாகச் சென்று முல்லைத்தீவு கொக்கிளாய் வீதி வழியாக அலம்பிலைச் சென்றடைந்து தொடர்ந்து அலம்பில் குமுழமுனை வீதிவழியாக குமுழமுனை மகாவித்தியாலயத்தின் முன்பாக நிறைவடைந்தது.

பெண்களுக்கான மரதனானது முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டு முல்லைத்தீவு கொக்கிளாய் வீதி வழியாக அலம்பிலைச் சென்றடைந்து தொடர்ந்து அலம்பில் குமுழமுனை வீதிவழியாக குமுழமுனை மகாவித்தியாலயத்தின் முன்பாக நிறைவடைந்தது. இந்த மரதனில் 179 வீரர்களும், 60 வீராங்கனைகளும் கலந்துகொண்டனர். இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற இருபாலருக்கும் பதக்கம் வழங்கப்பட்டது.

ஆண்கள் பிரிவில் முதலாமிடம் ஜெ. சுபராஜ் கொக்குத்தொடுவாய்,

இரண்டாமிடம் எஸ். யாழ்மைந்தன் - வள்ளுவர்புரம் விசுவமடு,

மூன்றாமிடம் எஸ். அகிலன் தியோநகர் சிலாவத்தை

பெண்கள் பிரிவில் முதலாம் இடம் என். கேமா - குரவயல் உடையார்கட்டு, இரண்டாமிடம் விதுசா - கெருடமடு மன்னகண்டல், மூன்றாமிடத்தை மாணிக்கபுரம் விசுவமடுவை சேர்ந்த ஏ. அபிநயா ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# தென்னாபிரிக்காவை வீழ்த்திய இங்கிலாந்து

தென்னாபிரிக்காவுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், கிம்பெர்லேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் இங்கிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

இங்கிலாந்து: 346/7 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜொஸ் பட்லர் 131 (127), டேவிட் மலன் 118 (114), மொயின் அலி 41 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: லுங்கி என்கிடி 4/62, மார்கோ ஜன்சன் 2/53)

தென்னாபிரிக்கா: 287/10 (43.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஹென்றிச் கிளாசென் 80 (62), றீஸா ஹென்ட்றிக்ஸ் 52 (61), ஏய்டன் மார்க்ரம் 39 (35), தெம்பா பவுமா 35 (27), வெய்ன் பார்னல் 34 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஃப்ரா ஆர்ச்சர் 6/40, அடில் ரஷீட் 3/68, கிறிஸ் வோக்ஸ் 1/51)

போட்டியின் நாயகன்: ஜொஸ் பட்லர்

தொடரின் நாயகன்: ஜொஸ் பட்லர்



உக்ரேன்




# தாக்குதலை தீவிரப்படுத்தும் ரஷ்யா?

நேட்டோ படையுடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரஷ்யா கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து உக்ரேன் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது. அதே சமயம் உக்ரேனும் ரஷ்யா மீது பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது. இப்போரில் இருதரப்பில் இருந்தும் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், முதலாம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் தாக்குதலை தீவிரப்படுத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளதாகவும், குறிப்பாக லுஹான்ஸ்க் பகுதியில் ரஷ்யா தனது இராணுவ பலத்தை அதிகரித்து வருவதாகவும் உக்ரேன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியா

# உலகின் அழகான நபர் இவர்தான்




உலகின் மிகவும் அழகான மனிதராக பிரபல நடிகர் ' ரீஜ்-ஜீன்'(Reg Jean) அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளார்.

அழகிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் 'கிரேக்க வேர்ல்டன் ரேஷியோ ஆப் பியூட்டி ` (Greek Golden Ratio of Beauty )விகிதத்தின் படி 93.65 சதவீதம் துள்ளியமாக அவர் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அதே சமயம் இது குறித்து லண்டனை சேர்ந்த பிரபல பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணராக ஜூலியன் கருத்துத் தெரிவிக்கையில் ''ரீஜ்-ஜீன் தனது அழகான முகம் மற்றும் அழகான பழுப்பு நிற கண்களால் அழகான மனிதராகக் கருதப்படுகின்றார். அவரது கண்களின் அமைப்பிற்காகவே அதிக மதிப்பெண்களை அவர் எளிதாகப் பெற்றுள்ளார்'' என்றார்.

நெதர்லாந்து

# அதிரடி அறிவிப்பை வெளியிட்ட 'பிலிப்ஸ்'



அண்மைக் காலமாக வருவாயை அதிகரிக்கும் நோக்கில் உலகின் முன்னணி நிறுவனங்களான டுவிட்டர், மெட்டா, அமேசான், கூகுல் ஆகிய நிறுவனங்கள் தங்களது ஊழியர்களைப் பணிநீக்கம் செய்து வருகின்றன.

அந்த வரிசையில் தற்போது நெதர்லாந்தைச் சேர்ந்த பிரபல சுகாதார தொழில்நுட்ப நிறுவனமான பிலிப்ஸும் இணைந்துள்ளது.

இந்நிறுவனமானது சரிவடைந்து வரும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காகவும், இலாபத்தை அதிகரிப்பதற்காகவும் சுமார் 6000 ஊழியர்களைப் பணி நீக்கம் செய்யவுள்ளதாக அண்மையில் அறிவித்துள்ளது.

இந்நிறுவனம் சந்தை மதிப்பில் 70% வீழ்ச்சி அடைந்த சுவாச சாதனங்களை திரும்ப பெற்றதைத் தொடர்ந்தே இவ்வறிவிப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான்

# பாகிஸ்தானில் பரபரப்பு; 17 பேர் கைது


பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் உள்ள பள்ளிவாசலொன்றில் கடந்த 30ஆம் திகதி 'தெரீக்-இ-தலிபான்' அமைப்பினரால் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 101 உயிரிழந்தனர்.

மேலும் 150 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பாகிஸ்தான் தலிபான் அமைப்பின் தளபதி உமர் காலித் குராசானி என்பவர், ஆப்கானிஸ்தானில் கடந்த ஓகஸ்ட் மாதம் கொல்லப்பட்டமைக்கு பழிவாங்கும் விதமாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் காயமடைந்தவர்களில் பலரது நிலை கவலையளிக்கும் வகையில் இருப்பதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகின்றது.

அதேசமயம் இத் தாக்குதலுடன் தொடர்புடைய 17 பேரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.



அமெரிக்கா



# ஆணுறையில் வாழை பழம்; இளைஞரின் செயலால் மருத்துவர்கள் அதிர்ச்சி

ஆணுறையில் வாழை பழம் ஒன்றை வைத்து வாலிபர் ஒருவர் செய்த செயலானது மருத்துவ உலகை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

அமெரிக்காவின் லோவா நகரில் வசித்து வரும் இளைஞர் ஒருவருக்கு தனது பாலியல் வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் 34 வயதான குறித்த இளைஞர், ஆணுறைக்குள் வாழை பழம் ஒன்றை வைத்து அதனை உட்கொண்டுள்ளார். இதனால் அவருக்கு கடுமையாக வயிற்று வலி மற்றும் வாந்தி என்பன ஏற்பட்டுள்ளது.

அதேசமயம் அவர் உணவு மற்றும் நீ அருந்தவும் முடியாமல் சில தினங்களாகத் தவித்து வந்துள்ளார்.

இதனையடுத்து அவர் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.


அங்கு அவரது வயிற்றை ஸ்கேன் செய்து பார்த்த மருத்துவர்கள், அவரது சிறு குடலில் ஆணுறையால் சுற்றப்பட்ட வாழை பழம் ஒன்று இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இதனையடுத்தே அந்த நபர், ஆணுறைக்குள் வாழை பழம் ஒன்றை வைத்து அதனை உட்கொண்டிருந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அவரது வயிற்றில் இருந்த வாழை பழத்துடன் கூடிய ஆணுறையை மருத்துவர்கள் நீக்கியுள்ளனர்.

இந்நிலையில் அவர் தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

ஸ்பெயின்



# பார்வையற்றோருக்கு நற்செய்தி

பார்வையற்றோருக்கு உதவும் வகையில் செயற்கை நுண்ணறிவு திறன் கொண்ட ''ரோபோ நாயை'' ஸ்பெயினைச் சேர்ந்த விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

''டெஃபி'' என்று பெயரிடப்பட்ட இந்த ரோபோ நாயானது எதிரே வரும் வாகனங்கள், மனிதர்களை தனித்தனியாக அடையாளம் கண்டு பார்வையற்றவர்களுக்கு வழிகாட்டும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த ரோபோவானது கூகுல் மேப்பினைப் பயன்படுத்தி பார்வையற்றவர்களை உரிய இடத்திற்கு அழைத்துச் செல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 03 பெப்ரவரி2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.